27TH APRIL 2025

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 02 | இதழ்: 76 | பக்கங்கள் - 19 | editor.uthayam@gmail.com

## 177,588 மாணவர்கள் பல்கலைக்குத் தகுதி!

நேற்று வெளியாகிய கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சைப் பெறுபேறுகளின் படி 177,588 மாணவர்கள் பல்கலைக்குத் தகுதி பெற்றுள்ளனர்.

456 பரீட்சார்த்திகளின் பரீட்சை பெறுபேறுகள் இடைநிறுத்தி வைக் கப்பட்டுள்ளது.

03ம் பக்கம்பார்க்க...

## 2026 முதல் முதலாம் ஆறாம் வகுப்புகளில் புதிய கல்வி முறை ஆரம்பம்

2026 ஆம் ஆண்டு முதல் நாட்டில் புதிய கல்வி முறையை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

03ம் பக்கம்பார்க்க...

# அனைத்து குழந்தைகளின் மரணத்துக்கும் கட்டாய மரண பரிசோதனை

### அரசின் சர்ச்சைக்குரிய சுற்று நிருபத்துக்கு பல்வேறு தரப்பினரும் அதிருப்தி;

### மீள் பரிசீலனை செய்யுமாறும் வேண்டுகோள்!

”5 வயதுக்குட்பட்ட அனைத்து குழந்தைகளின் மரணத்திற்கும் பிரேத பரிசோதனை (Postmortem) கட்டாயம்” சர்ச்சைக்குரிய சுற்றுநிருபத்தை வெளியிட்டது நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சு.

ஐந்து வயதுக்குட்பட்ட அனைத்து குழந்தைகளின் மரணங்களும் கட்டாய பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என திடீர்

02ம் பக்கம்பார்க்க...

## ஐ.நா. வெசாக் தினத்தில் பங்கேற்க வியட்நாம் செல்லும் ஜனாதிபதி அனுர



ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அடுத்த மாத ஆரம்பத்தில், வியட்நாமுக்கு அதிகாரப்பூர்வ விஜயம் மேற்கொண்டு 20வது ஐக்கிய நாடுகளின் வெசாக் தினத்தில் கலந்து கொள்ள உள்ளார்.


இந்த ஆண்டு ஐக்கிய நாடுகளின் வெசாக் தினத்திற்கான முக்கிய கருப்பொருள் ”மனித கண்ணியத்திற்கான ஒற்றுமை மற்றும் உள்ளடக்கம்: உலக அமைதி மற்றும் நிலையான வளர்ச்சிக்கான பௌத்த நுண்ணறிவு” என்பதாகும்.

இந்த வெசாக் கொண்டாட்டங்கள் மே 6

03ம் பக்கம்பார்க்க...

## ஈரான் துறைமுக விபத்தில் 750 பேர் காயம்

### பலி எண்ணிக்கை 14 ஆக உயர்வு



பாரசீக வளைகுடாவின் கிழக்கு கடற்கரையில் அமைந்துள்ள பந்தர் அப்பாஸ் துறைமுகத்தில் நேற்று இடம்பெற்ற பாரிய வெடி விபத்தில் ஏறத்தாழ 750 பேர் காயமடைந்

03ம் பக்கம்பார்க்க...

## நடு நிலையான, வெளிப்படையான எந்த விசாரணைக்கும் நாம் தயார்

### சிந்து நதி நீர் எமது உரிமை அதனை

### மீளப் பெற எந்த விலையும் கொடுப்போம்;

### பாக்: பிரதமர் ஷாபாஸ் ஷெரீப் காட்டம்!



காஷ்மீர் பஹால்கம் தாக்குதலை அடுத்து இந்திய அரசு எடுத்துள்ள அதிரடி நடவடிக்கைகள் குறித்து தமது நாடு மிக அவதானத்துடன் செயற்பட்டு

03ம் பக்கம்பார்க்க...

## ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் நாளை இலங்கை வருகை

### ஜீ.எஸ்.பி .பிளஸ் குறித்து ஆராய்வு

ஜீ.எஸ்.பி. பிளஸ் சலுகை தொடர்பில் கலந்துரையாட ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் நாளை (28) இலங்கைக்கான விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளனர்.

03ம் பக்கம்பார்க்க...

## மே தினத்துக்கு தயாராகும் அரசியல் கட்சிகள்

### பாரிய பேரணிகளுக்கு ஏற்பாடு

தேசிய தொழிலாளர் தினத்தன்று தேசிய மக்கள் சக்தி இயக்க அரசாங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட மே தின பேரணியை எதிர்வரும் வியாழக்கிழமை (மே 1) கொழும்பில் உள்ள காலி முகத்திடலில் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

04ம் பக்கம்பார்க்க...

## திசைகாட்டியின் வளமான நாடும் அழகான வாழ்க்கையும் இல்லை

### கொலைகள் தான் தாண்டவம்; மாவத்தகமவில் சஜித் ஆதங்கம்!



சுப நேரத்தில் நாட்டை அநுரவுக்கு கொடுத்து, வளமான நாட்டையும், அழகான வாழ்க்கையையும் மக்கள் எதிர்பார்த்தனர்.

ஆனால் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க

03ம் பக்கம்பார்க்க...

அமானா வங்கியில்
வாகன நிதியுதவி



உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் மலிவான மாதாந்த தவணைகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 1,933/-
ரூ.100,000க்கு வாடகை*

- குறைந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரை மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி

Amãna Bank

**அனைத்து...**
**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

மரண விசாரணை அதிகாரி (Coroner) களுக்கு Ministry of Justice & Integration அமைச்சு வெளியிட்டுள்ள சுற்றுநிரூபத்தில் தெரிவித்துள்ளது.

மரண விசாரணை அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட ஒரு சுற்றறிக்கையில், இது இலங்கையில் குழந்தை மரண பகுப்பாய்வின் ஒரு அத்தியாவசிய அங்கம் என அமைச்சு வலியுறுத்தியுள்ளது.

இதுபற்றி ஞரனெயல வைஅநள வெளியிட்டுள்ள செய்தியில் அமைச்சின் மூத்த அதிகாரிகள் கூறியதாவது:

இந்த நடைமுறை ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளின் மரணங்களின் பொதுவான காரணங்களைக் கண்டறிந்து, அத்தகைய மரணங்களைத் தவிர்க்க தடுப்பு நடவடிக்கைகளை எடுப்பதற்காக அமுல்படுத்தப்படுவதாக தெரிவித்தார்.

"இந்த மரணங்களுக்கு பின்னால் உள்ள காரணங்களைப் படிப்பதற்கும் பகுப்பாய்வு செய்வதற்கும் பிரேத பரிசோதனை முடிவுகள் பயன்படுத்தப்படும், இதன் மூலம் இம்மரண வீதங்களைக் குறைக்க முடியும்." என்பது அவர்களது கருத்தாக இருந்தது.

மற்றொரு தகவலின்படி சமீபத்தில் தாய் மரண விகிதத்தில் குறைவு அடைந்ததைத் தொடர்ந்து, இலங்கையின் ஆரோக்கிய குறிகாட்டிகளை (Health index) மேம்படுத்துவதற்கான அதிகாரிகளின் முயற்சியாக இந்த நடவடிக்கை உள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

தற்போதுவரை, ஒரு குழந்தையின் மரணம்

01. சந்தேகத்திற்குரிய தீங்கு (Suspected Harm)

02. சந்தேகத்திற்கிடமான சூழ்நிலைகள் (Suspected Circumstances)

03. அல்லது விபத்துகளை உள்ளடக்கியிருந்தால் மட்டுமே

திடீர் மரண விசாரணை அதிகாரியினால் (Coronor) மரண விசாரணை (Inquest) மேற்கொள்ளப்பட்டு பிரேத பரிசோதனை மேற்கொள்ள உத்தரவிடப்படும்.

எனினும், புதிய சட்டப்படி, மருத்துவர்கள் ஏற்கனவே மரணத்தின் (நோய்க்) காரணத்தை தீர்மானித்திருந்தாலும், ஐந்து வயதுக்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் உடற்கூற்று பரிசோதனை (Postmortem) தேவைப்படும்.

Sunday times செய்திகள் மேலும் தெரிவிக்கையில்

இந்த கொள்கையை பல வைத்திய நிபுணர்கள் விமர்சித்துள்ளனர்.

சந்தேகத்திற்குரியதாக இல்லாத மரணங்களுக்கு எப்போதும் பிரேத பரிசோதனை தேவையில்லை என்பதைக் குறிப்பிட்டு, இது தேவையற்ற ஊடுருவல் என்று தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

ஒவ்வொரு பிரேத பரிசோதனைக்கும் அண்ணளவாக ரூ. 15,000 செலவாகும் என்பதை அவர்கள் சுட்டிக்காட்டினர்

இவ்வாறான Routine postmortem செய்ய வேண்டும் என நிர்பந்திப்பது பணம், நேரம் மற்றும் சுநளழரசஉநள வீண் விரையமாவதற்கு வழிவகுக்கும்.

"இத்தகைய கடுமையான நடவடிக்கைகளைக் கோருவதற்கு முன், இந்த செயல்முறையின் ஒவ்வொரு படியிலும் ஈடுபட்டுள்ள பங்குதாரர்களுடன் (stakeholders) அவர்கள் கலந்தாலோசித்திருக்க வேண்டும்.

தொழில்நுட்ப உள்ளீடு (Technical input) இல்லாமல் சுற்றறிக்கைகள் மூலம் உத்தரவுகளை வழங்கக்கூடாது," என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

தேர்தல் நெருங்கி வரும் வேளையில் அரசாங்கத்தை பொறுத்தவரையில் இது ஒரு தேவையில்லாத ஆணி.

ஏற்கனவே மரணத்துக்கு காரணமான நோய் நிர்ணயம் செய்யப்பட்டதின் பின் Postmortemக்கு உத்தரவிடுவது Pathological Postmortem வகையறாவாக மாறும். அவ்வாறான சந்தர்ப்பத்தில் குழந்தையின் பெற்றோர் / பாதுகாவலரின் அனுமதி இல்லாமல் போஸ்மோட்டம் செய்ய முடியாது. (ஆனால் இந்த சுற்றுநிரூபம் அதனை Override பண்ணுவதாக அமையலாம்.)

ஒரு குழந்தையின் மரணத்துக்கான காரணம் ஏற்கனவே (நோய்) நிர்ணயம் செய்யப்பட்டிருந்தால் அதன் பின் செய்யப்படும் கட்டாய Postmortem இனால் கிடைக்கும் பிரயோசனம் என்ன என்பதை தெளிவுபடுத்த வேண்டும்.

எனவே இது சட்டரீதியான பல சர்ச்சைகளையும் குழப்பங்களையும் ஏற்படுத்தும். இந்த சுற்று நிரூபத்தை அரசு ஏனைய நிபுணர்களுடன் கலந்துரையாடி மீள் பரிசோதனை செய்வது கட்டாயமானது.

**நன்றி:** Sunday times

**தமிழில்:** Ziyad Aia

# பௌத்த பக்தர்களுக்கு பள்ளிகள் திறப்பு பிரதமர் ஹரிணி மனதாரப் பாராட்டு



வரலாற்றில் முதல் முறையாக, கண்டியில் உள்ள பள்ளிவாசல்கள், புனித தலதா மாளிகைக்கு வருகை தரும் பக்தர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக, தங்கள் கதவுகளைத் திறந்ததாகவும், இனங்கள் மற்றும் மதங்களாகப் பிரிந்து செல்வதற்கு அப்பால் அனைவரும், இலங்கையர்கள் என்பதால் மக்கள் இப்போது தங்களைப் பற்றி சிந்திக்கத் தொடங்கியுள்ளனர் என்றும் பிரதமர் டாக்டர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

குருநாகலில் உள்ள பரகஹதெனிய பகுதியில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றும் போது பிரதமர் இந்தக் கருத்துக்களை தெரிவித்தார்.

பிரதமர் டாக்டர் ஹரிணி அமரசூரிய மேலும் கூறியதாவது:

இந்த நாடு நாம் எதிர்பார்த்த ஒரு மாற்றத்திற்கு உட்பட்டுள்ளது, எனவே அதற்கேற்ப, நாம் புதிய வழிகளில் செயல்பட வேண்டும். ஒரு புதிய மாற்றத்தை நோக்கி நாம் செயல்பட வேண்டும் என்று மக்கள் உணரத் தொடங்கியுள்ளனர்.

நமது அமைச்சகங்களுக்குள்ளும் கூட இந்த மாற்றத்தைக் காணலாம்.

இப்போதெல்லாம், சில நேரங்களில் மாலை 5 மணிக்குப் பிறகும் அமைச்சகங்களுக்குச் சென்று, கலந்துரையாடல்கள் நடத்த முடியுமா என்று கேட்கும்போது, அதிகாரிகள் எப்போதும் திறந்திருப்பார்கள். இன்று, பொது அதிகாரிகள் இரவு 9 அல்லது 10 மணி வரை இரவு தாமதமாக வேலை செய்யத் தயாராக உள்ளனர். அதிகாரிகள் இப்போது பயமின்றி வேலை செய்யத் தொடங்கியுள்ளனர்.

தற்போது, பல தசாப்தங்களுக்குப் பிறகு புனித தலதா மாளிகைக்கு புனித யாத்திரை நடைபெறுகிறது. அங்கு பொதுமக்கள் எவ்வாறு நடந்துகொள்கிறார்கள் என்பதைக் கவனிப்பது குறிப்பிடத்தக்கது.

வரலாற்றில் முதல்முறையாக, கண்டியில் உள்ள முஸ்லிம் மசூதிகள் புனித தலதா மாளிகைக்கு வருகை தரும் யாத்ரீகர்களை தங்க வைக்க இரவு முழுவதும் திறந்திருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

பக்தர்கள் ஓய்வெடுக்க இடம் கூட வழங்கினர்.

இன அல்லது மத பதட்டங்கள் எதுவும் இல்லை. நாங்கள் கண்டது மற்ற இனங்கள் மற்றும் மதங்களுக்கு மரியாதை செலுத்துவதாகும். சிங்களவர்கள், முஸ்லிம்கள் அல்லது தமிழர்கள் மட்டுமல்ல, அனைத்து இலங்கை மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு அரசாங்கம் இப்போது இருப்பதால் இது நடக்கிறது.

இந்த நிகழ்வில் உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்பாளர்கள், அப்பகுதிவாசிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.




## ஈரான்....
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)





துள்ளதுடன் 14 பேர் மரணமடைந்துள்ளதாக ஈரானிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கொள்கலன்களில் ஏற்பட்ட திடீர் வெடிப்பினால் சகல பகுதிகளுக்கும் தீ பரவியதால் பெரும் பாதிப்புகள் ஏற்பட்டதாகவும் தீயணைப்பு வீரர்களின் துரித செயற்பாட்டினால் மிகப் பெரிய ஆபத்து தவிர்க்கப்பட்டதாகவும் அதிகாரிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

## 177,588....
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை உயர்தர பரீட்சைப் பெறுபேறுகளின் மீள் பரிசீலனைக்கான விண்ணப்பங்களை எதிர்வரும் மே மாதம் 2 ஆம் திகதி முதல் 16 ஆம் திகதி வரை சமர்ப்பிக்க முடியுமென பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

## 2026....
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குருநாகல் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் பங்கேற்று உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பெற்றோர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்களுக்கு தொந்தரவு இல்லாத வகையில் முதலாம்,ஆறாம் வகுப்புகளில் புதிய கல்வி முறை ஆரம்பிக்கப்படுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஐ.நா....
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

8 வரை ஹோ சி மின் நகரில் நடைபெறும்.

நிலையான வளர்ச்சி

இதில், 85 நாடுகள் மற்றும் பிரதேசங்களைச் சேர்ந்த 1,250 சர்வதேச விருந்தினர்கள் உட்பட சுமார் 2,700 பிரதிநிதிகள் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அடுத்த மாதம் வியட்நாம் பறக்கவுள்ள ஜனாதிபதி அநுர!

;“சநளனைநவெ யுரெசய ஐள புழைெப வுழ ஏநைவயெஅ

இலங்கையைத் தவிர, இந்தியா, நேபாளம், லாவோஸ் மற்றும் கம்போடியா போன்ற நாடுகளிலிருந்தும் உயர்மட்ட பிரதிநிதிகள் வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்திய மகா போதி சங்கத்தின் பாதுகாப்பில் உள்ள இந்த நினைவுச்சின்னங்கள் முதன்முறையாக வியட்நாமுக்கு எடுத்துச் செல்லப்பட்டு, ஒரு வாரத்திற்கு நாடு முழுவதும் காட்சிப்படுத்தப்படும்.

ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளின் இறப்பு! மரண விசாரணை அதிகாரிகளுக்கு விடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்

ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளின் இறப்பு! மரண விசாரணை அதிகாரிகளுக்கு விடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்

ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச வெசாக் தினத்தை முன்னாள் இலங்கை வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், 1999இல் முன்மொழிந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஐரோப்பிய....
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐரோப்பிய நாடுகளுக்கான ஏற்றுமதிகளின் போது இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ள ஜீ.எஸ்.பி. பிளஸ் சலுகையை தொடர்ந்தும் வழங்குவதற்கான நிபந்தனைகளில் ஒன்றாக 27 சர்வதேச பிரகடனங்கள் தொடர்பில் இலங்கை அடைந்துள்ள முன்னேற்ற நிலை குறித்து ஆராய்வதே இவர்களின் விஜயத்தின் நோக்கமாகும்.

முழு இலங்கையும் நிராகரித்த வைத்தியர் ஷாபியின் மகளின் வியக்க வைக்கும் சாதனை! மனமுடைந்த ஆசான்

முழு இலங்கையும் நிராகரித்த வைத்தியர் ஷாபியின் மகளின் வியக்க வைக்கும் சாதனை! மனமுடைந்த ஆசான்

ஏற்றுமதிகளை மேற்கொள்ளும் நாடுகள்

ஏப்ரல் 28ஆம் திகதி இலங்கை வந்தடையும் ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் குழு எதிர்வரும் மே மாதம் 07ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருந்து இது தொடர்பான மீளாய்வுகள் மற்றும் கலந்துரையாடல்களை மேற்கொள்ளவுள்ளது.

இலங்கையின் ஆகக் கூடியளவில் ஏற்றுமதிகளை மேற்கொள்ளும் நாடுகளின் பட்டியலில் ஐரோப்பிய ஒன்றியம் இரண்டாம் இடத்தில் உள்ளது.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு இலங்கை வருடாந்தம் மூன்று பில்லியன் டொலர் பெறுமதியான ஏற்றுமதிகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## திசைகாட்டியின்....
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைமையிலான அரசாங்கம் வாக்குறுதியளித்த வளமான நாடும், அழகான வாழ்வும் இன்று இல்லை.

குண்டர்கள், கொள்ளையர்கள் மற்றும் கொலைகாரர்களின் பிடியில் சமூகம் சிக்கியுள்ளது.

மிருகத்தனமும் வன்முறையும் பரவியுள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

தேசியப் பாதுகாப்பு குறித்து டியுஷன் வகுப்புகள் எடுக்கிறோம் வாருங்கள் என கூறி பெருமையடித்த இந்த அரசு, இன்று பாதுகாப்பு குறித்து டியுஷன் வகுப்புக்கு செல்ல வேண்டிய நிலைக்கு வந்துள்ளது. சமகாலத்தில் பல துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள், கொலைகள், உயிரிழப்புகள் இடம்பெற்றுள்ளன. வீடுகள், வீதிகள், பணியிடங்கள் பாதுகாப்பற்று காணப்படுகின்றன என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

மாவத்தகம பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

இன்று பொதுமக்களுக்கு பாதுகாப்பு இல்லை. வளமான நாடு அழகான வாழ்க்கை என்ற கொள்கைப் பத்திரம் வாக்குறுதிகளை மீறும் நாடகமாக மாறியுள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

பொருட்களின் விலைகள், எரிபொருள் விலைகள், மின்சாரக் கட்டணம், ஏயுவு, மற்றும் பிற வரிகளைக் குறைப்பதாக வாக்குறுதி வழங்கினர். அந்த வாக்குறுதிகள் இன்னும் சரியாக நிறைவேற்றப்படவில்லை. இந்த ஆளுந்தரப்பினர் ஒலிவாங்கியை எடுத்துக்கொண்டு பச்சப் பொய்களை கூறி மக்களை ஏமாற்றி, அவஸ்தைப்படுத்தி வருகின்றனர் என எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார்.

வரவு செலவு திட்டத்தில் கூட இல்லாத விடயங்களை கூறி மக்களை ஏமாற்றி வருகின்றனர். பொய்களைக் கூறி நாட்டை ஏமாற்றும் இந்த கையாலாகாத அரசாங்கத்தை தோற்கடிக்க வேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

வாசகர்களே!
உதயம் பத்திரிகை குறித்தான உங்களது நேர்த்தியான கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றது.
உங்களது கருத்துக்கள் மற்றும் செய்திகளை கீழுள்ள மின்னஞ்சல் முகவரியூடாக அனுப்பி வைக்கவும்.

## நடுநிலையான...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருவதாகவும் பழி சுமத்தும் மற்றொரு விளையாட்டாகவே இதனைக் கருதுவதாகவும் எத்தகைய நடுநிலையான வெளிப்படையான விசாரணைகளுக்கும் தமது நாடு தயார் என்றும் பாகிஸ்தான் பிரதமர் ஷாபாஸ் ஷெரீப் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானின் கைபர் பகதுன்கவாவில் உள்ள காகுலில் இராணுவப் பயிற்சி நிறைவு நிகழ்ச்சியில் பங்கேற்ற பிரதமர் ஷாபாஸ் ஷெரீஃப் இது தொடர்பாக கூறுகையில்

'பஹல்காமில் அண்மையில் நடந்த சோகமான தாக்குதல், பழிபோடும் நடவடிக்கைக்கு மற்றொரு எடுத்துக்காட்டு. இது முடிவுக்கு வர வேண்டும். உரிய விசாரணை இல்லாமல், இந்தியா ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை சுமத்துவதைத் தொடர்வது வருத்தம் அளிக்கிறது.


பொறுப்பான நாடாக எங்களின் பங்கை உணர்ந்து, தாக்குதல் குறித்த எந்தவொரு நடுநிலையான, வெளிப்படையான மற்றும் நம்பகமான விசாரணையிலும் இணைய பாகிஸ்தான் தயாராக இருக்கிறது.

பாகிஸ்தானுக்குச் சொந்தமான சிந்து நதி நீரோட்டத்தைத் தடுக்க, குறைக்க அல்லது திசைதிருப்ப இந்தியா எடுக்கும் எந்தவொரு முயற்சிக்கும் நமது முழு பலத்துடன் பதிலடி கொடுக்கப்படும். அனைத்து வாய்ப்புகளையும் நாம் பயன்படுத்துவோம்.

ஏனெனில், சிந்து நதி நீர் நமது உயிர்நாடி மற்றும் ஒரு முக்கியமான தேச நலனாகும். எந்த விலை கொடுத்தாவது எல்லா சூழ்நிலைகளிலும் அதைப் பெறும் உரிமை நிச்சயமாகப் பாதுகாக்கப்படும்.

அதேபோல், நாட்டின் ஒவ்வோர் அங்குலத்தையும் பாதுகாக்க பாகிஸ்தானின் ஆயுதப் படைகளுக்கு ஆதரவாக முழு தேசமும் நிற்கிறது. நாட்டின் இறையாண்மையையும் அதன் பிராந்திய ஒருமைப்பாட்டையும் பாதுகாக்க நமது ஆயுதப் படைகள் முழுமையாகத் தயாராக உள்ளன. அதேநேரம், அமைதியே நமது முன்னுரிமை. ஆனால், இந்த நிலைப்பாடு நமது பலவீனமாக மாறிவிடக் கூடாது.

தீவிரவாதத்தை பாகிஸ்தான் முழுமையாக எதிர்க்கிறது. தீவிரவாதத்தால் 90,000-க்கும் மேற்பட்ட உயிரிழப்புகளையும், 60,000 கோடி டொலருக்கும் அதிக மதிப்பிலான பொருளாதார இழப்புகளையும் நாம் சந்தித்துள்ளோம்' என்றார்.



www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2025 APRIL 27 - SUNDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# சகல மக்களையும் கவர்ந்த கண்டி முஸ்லிம்களின் முன்மாதிரி

16 வருடங்களுக்குப் பின் இலங்கையில் கௌதம புத்த பெருமானாரின் புனித தந்த தாது கண்டியில் புனித தலதா மாளிகையில் கடந்த ஒரு வார காலமாக காட்சிப்படுத்தப்பட்டு வருகின்றது.

புனித தந்த தாதினை தம் கண்களால் கண்டுகளிப்பதற்காக இலட்சக்கணக்கான பௌத்த பக்தர்கள் நாட்டின் நாலா புறங்களில் இருந்தும் கண்டி மாநகரை ஆக்கிரமித்துள்ளனர். ஏற்பாட்டாளர்கள் எதிர்பார்த்ததை விட மக்கள் திரண்டு வந்து கொண்டிருப்பதனால் பக்தர்கள் வருவதனை கட்டுப்படுத்த வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஏற்பாட்டாளர்கள் தள்ளப்பட்டுள்ளனர். இதனால் கண்டிக்கு வரும் பக்தர்களுக்கு தேவையான வசதிகளை வழங்குவதற்காக அரசாங்கத்திற்கு மேலதிகமாக கண்டிவாழ் முஸ்லிம் அமைப்புகள் ஆற்றி வரும் சேவை இன மத பேதமின்றி சிலாகித்து பேசப்படும் ஒரு விடயமாக மாறியுள்ளது.

கண்டிக்கு வரும் பக்தர்களுக்கு உணவுப்பொதி விநியோகம், குடிநீர் வினியோகம், தேனீர் குளிர்பான விநியோகம் மற்றும் கழிப்பறை வசதிகளை வழங்குதல் மருந்து வசதிகளை செய்து கொடுத்தல் போன்றவற்றில் முஸ்லிம்கள் தொடராக செயற்பட்டு வருகின்றனர்.

கண்டி நகர ஜம்மியத்துல் உலமா, கண்டி நகர முஸ்லிம் வர்த்தக சங்கம், கண்டி மாவட்ட பள்ளிவாசல் சங்கம் என்பன இந்த நற்பணியை கூட்டாகவும் தனியாகவும் செய்து வருகின்றனர். கண்டி நகரில் உள்ள பள்ளிவாசல்கள் 24 மணி நேரமும் திறந்து வைக்கப்பட்டு பக்தர்களுக்காக பள்ளிவாசல்களின் கழிப்பறைகளை பயன்படுத்துவதற்கும் வசதி செய்யப்பட்டுள்ளது. பள்ளிவாசல்களில் இந்த வசதிகள் வழங்கப்படாவிடின் தற்போது உருவாகியுள்ள நெருக்கடி நிலைமை மேலும் மோசமானதாக இருந்திருக்கும். கண்டி முஸ்லிம் வர்த்தக சங்கம் பக்தர்களுக்கு தேவையான உணவு வசதிகளை செய்வதில் முன் நின்று உழைத்து வருகின்றது. இது தவிர கண்டி மாவட்ட முஸ்லிம் பாடசாலைகளின் மாணவிகள் பக்தர்களுக்கு தேவையான பெனடோல் போன்ற மாத்திரைகள் மற்றும் தண்ணீர் போத்தல்களை விநியோகிப்பதில் ஈடுபட்டு வருகின்றனர்.

அரசு தரப்பினர் கண்டி முஸ்லிம் சமூக அமைப்புகளிடம் விடுத்த வேண்டுகோளை மதித்து முஸ்லிம் சமூக அமைப்புகள் செய்யும் செயற்பாடானது இன நல்லிணக்கத்திற்கு சிறந்த உதாரணமாகும். கண்டி மாநகர ஆணையாளர் திருமதி இந்திரா குமாரி அபேசிங்க இச்செயற்திட்டத்தை முழு நாட்டிற்கும் முன்மாதிரியான ஒரு செயற்பாடு என நன்றியுடன் குறிப்பிட்டுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம் பெற்று ஆறு ஆண்டுகள் நிறைவு பெறும் நிலையில் சில இனவாத சக்திகள் முஸ்லிம் சமூகத்தின் மீது குரல் நீட்டி அறிக்கைகளை வெளியிடும் இக்காலகட்டத்தில் கண்டி நகரில் முஸ்லிம்கள் செய்து வரும் இக் காரியம் நாட்டின் நாலாபுரங்களிலும் இருந்து கண்டிக்கு வரும் பௌத்த பக்தர்களுக்கு முஸ்லிம்களைப் பற்றிய நற்செய்தியுடன் தம் வீடுகளுக்கு செல்வதற்கு உதவியாக அமைந்துள்ளது.

முஸ்லிம்களைப் பற்றி இதுவரை காலம் தப்பான அபிப்பிராயங்களை கொண்டிருந்த அனைவரது கருத்துக்கள் இச்செயற்பாட்டால் மாற்றப்பட்டு வருகின்றது.

இலங்கை முஸ்லிம்களின் இச்செயற்பாடானது பெரும்பான்மை மக்களின் மனதில் ஒரு நல்ல அபிப்பிராயத்தை உருவாக்குவதோடு சமூகங்களுக்கிடையே ஒற்றுமையாக வாழ வழி கோலும் என்பதும் நிச்சயம். இச் செயற்பாட்டில் இரவு பகல் பாராது உழைத்த சகலருக்கும் குறிப்பாக வழிகாட்டிய கண்டி நகர முஸ்லிம் தலைமைத்துவத்திற்கும் பாராட்டுக்கள் உரித்தாகின்றது.

## மே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவின் தலைமையில், அரசாங்கத் தலைவர்களின் பங்கேற்புடன் நடைபெறும் இந்த மே தினக் கூட்டத்திற்கான அணிவகுப்பு நடத்துவது குறித்து இன்னும் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை.

இதற்கிடையில், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் தலைமையில், அதன் தலைவர்களின் பங்கேற்புடன், தலவாக்கலை நகரில் மே தினக் கூட்டத்தை நடத்த ஐக்கிய மக்கள் சக்தி முடிவு செய்துள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தற்போது நுகேகொடை ஆனந்த சமரகோன் திறந்தவெளி அரங்கில் மே தினக் கூட்டங்களை நடத்த தீர்மானித்துள்ளதுடன், நிமல் சிறிபால டி சில்வா தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் கொழும்பிலும் மே தினக் கூட்டங்களை நடத்தவுள்ளனர்.

மே தினக் கூட்டத்தை ஏற்பாடு செய்வதற்கான நடவடிக்கைகளை ஐக்கிய தேசியக் கட்சி இன்னும் எடுக்கவில்லை.

இந்த நாட்டில் உள்ள பல அரசியல் கட்சிகளும் அமைப்புகளும் தீவின் பல்வேறு பகுதிகளில் மே தினக் கூட்டங்களை நடத்த ஏற்கெனவே முடிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



அசுர வேகத்தில் வலம் வந்து கொண்டிருக்கும் உதயம் பத்திரிகையில் உங்களது நிறுவனங்களின் விளம்பரங்களை பிரசுரிக்க வேண்டுமாயின் தொடர்புகளுக்கு:
070 239 7210



# கங்கானங்கொட வட்டாரத்தை வென்றிட

## களமிறங்கியுள்ள முஹம்மத் சுபியான் – இலம்சி யசோரா

**பேருவளை பி.எம் முக்தார்**

பேருவளை நகர சபை தேர்தலில் கங்கானம் கொட இரட்டை அங்கத்தவர் வட்டாரத்தில் ஐக்கிய மக்கள் சக்தி சார்பாக தொலைபேசி சின்னத்தில் இளம் சமூக சேவையாளர் அப்துல் ரஹீம் முகம்மத் சுபியான் களம் இறங்கியுள்ளார்.

இவருடன் அடுத்த இணை வேட்பாளராக பேரினச் சகோதரி இளம் மங்கை இலம்சி யசோராவும் களத்தில் குதித்துள்ளார். இந்த சகோதரி, ருஹூனு பல்கலைக்கழக பௌதீகவியல் விஞ்ஞானி பட்டதாரியாக விளங்கும் அதே நேரத்தில் சமூகப் பணிகளிலும் புது முகம் காட்டிக் கொண்டே அரசியலிலும் ஈடுபாடு காட்டும் நோக்கிலே இந்த தேர்தலில் முன்வந்துள்ளார்.

கங்காம் கொட வட்டாரத்தை இவர்கள் இருவரும் வென்றெடுக்கும் பட்சத்தில் இப்பகுதியின் சிங்கள முஸ்லிம் ஒற்றுமை பலமாக விளங்குவார்கள். இது முழு நாட்டிற்கும் முன்மாதிரி காட்டும் வட்டாரமாகவும் புகழ் பூக்கும் இடமாகவும் பேசப்படும் என்பதில் ஐயமில்லை .

வேட்பாளர் முகமது சுபியான் அவர்களை கங்கானம் கொடையில் கண் காணாதவர் எவருமில்லை என்னும் அளவுக்கு எல்லோராலும் நன்கு அறியப்பட்டவர் இவர் வேறு வழக்கில் மட்டுமல்ல களுத்துறை மாவட்டத்திலும் பேசப்படும் ஒரு சமூக தொண்டன் தான்.

வைத்தியசாலைகளில் மரணங்கள் சம்பவத்தால் அதனை துரிதமாக எடுத்து வருவதில் இவர் ஓர் இயந்திர மனிதன் தான்.

சமூகப் பணிகளில் இவர் ஓயாத அலை. 24 மணி நேரமும் சமூக நல சேவைகளில் தன்னை அர்ப்பணித்து கொண்டிருக்கும் ஒரு மனிதப் பிறவியே .

இவரது குடும்பப் பின்னணியும் இவருக்கு கலைத்ததாக இல்லை.

இலங்கை இராணுவப் படையணியின் ......

பதவி வகித்து ஓய்வு பெற்ற மர்ஹோம் ஜலால்தீன் தம்பதியின் பேரனும் பெருக மலையைச் சேர்ந்த மர்ஹோம் அப்துல் ரஹீம் பாத்திமா ஸரீனா தம்பதியின் புதல்வருமான சுபியான் அரசியலுக்கு வர வேண்டிய ஒரு யுக புருஷன் என்பது இப்பகுதி மக்கள் பலரதும் ஏகோபித்த கருத்தாக உள்ளது.

அந்த அளவுக்கு இவரது சமூகத் தொண்டினால் பயன் பெற்றோர் பலர் அரசியல்வாதிகளை நாடி அவர்களின் அனுசரணைகளை பெற்று வறிய குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர் யுவதிகளுக்கு சுயதொழில் முயற்சிகளில் ஈடுபடுவதற்கான தையல் இயந்திரங்கள், இளைஞர்களுக்கு சைக்கிள்களை பெற்று கொடுப்பதில் இவரது பங்களிப்பு மகத்தானதாகும்.

மேலும் தமக்கு அறிமுகமான தனவந்தவர், நான் கொடியாளர்களுடன் தொடர்பு வைத்து விளையாட்டு குழுக்களுக்கான உபகரணங்கள் இளைஞர் அமைப்புக்கு தேவையான உதவி ஒத்தாசைகளை பெற்றுக் கொடுப்பதிலும் இவர் சளைத்தவரல்லர். வீதிப்புணர் அமைப்பு விளையாட்டு மைதான விஸ்தரிப்புகளிலும் இவர் தொண்டு நிறுவனங்களின் ஊடாக நிறைவேற்றிக் கொடுப்பதிலும் இவரது உழைப்பு பாராட்டத்தக்கதாவே உள்ளன.





இவர் இளம் பருவத்தினராக இருந்த போது சுனாமியால் வேறு வழியின் கடற்கரையை அண்டிய பகுதிகள் வெகுவாக பாதிக்கப்பட்ட நிலையில் சக பணியாளர்களுடன் இணைந்து உயிரை துச்சமாக வைத்து நிவாரண மீட்பு பணிகளில் அயராது ஈடுபட்டதை என்னிடம் நினைவு கூறியுள்ளார்.

கொவிட் -19, கொரோனா தொற்றினால் வேறு வழியில் சின்ன கோட்டை உள்ளிட்ட பல ஊர்கள் லொக்டவுன் முடங்கப்பட்ட சந்தர்ப்பங்களில் வீடுகளில் இருந்து வெளியேற இயலாத மக்களுக்கு அதுவும் உயிரை பனையம் வைத்தே என்று தான் கூற வேண்டும் . இவர் பாதுகாப்பு அதிகாரிகள் சுகாதார பரிசோதகர்கள் போன்றோர் அது கட்டுப்பாடுகளை சமயோகிதமாக கையாண்டு நிவாரணம் பொதிகளை கையளிப்பதில் இரவு பகலாக தன் ஆர்வத்துடன் செயலாற்றி யுள்ளார். ஊரிலே இயற்கையாகவோ விபத்துக்கள் மூலமோ ஜனாஸாக்கள் சம்பவித்தால் சம்பந்தப் பட்ட மரண வீட்டில் முதல் ஆளாக இவரைத்தான் காண முடியும். அந்த அளவுக்கு விரைந்து சென்று சமயோசிதத்தை கையாண்டு சட்டபூர்வமாக அனுமதி பத்திரங்களைப் பெற்று துரிதமான ஜனாஸாக்களை அடக்கம் செய்வதில் மகத்தான சேவைகளை செய்வதிலும் வல்லவராக உள்ளார்.

பௌத்த, கிறிஸ்தவ, முஸ்லிம் ,இந்து, மதத்தவர்கள் இரண்டறை கலந்து வாழும் இப்பகுதியில் இவர் சகல மத இனத்தவர்களையும் அனுசரித்து அரவணைத்து தன் பணிகளை செய்வதிலும் முன் மாதிரியாக நடந்து கொள்வார் இதனால் கங்கா நகரை அங்கத்தவர் வட்டாரத்தில் முஸ்லிம்களோடு பிற சமூகத்தவர்களின் கணிசமான வாக்குகளை தொலைபேசி எண்ணத்துக்கு பெற்று கொடுத்து இவரும் இலம்சி யசோராவும் நகர சபையில் வெற்றி வாகை சூடுவார்கள் என்பதே வட்டார மக்களது எதிர்பார்ப்பாகவுள்ளதை அறிய முடிகிறது.

தேர்தலில் போட்டியிடுவது குறித்து இவர் கருத்து தெரிவிக்கையில், எனது வெற்றியில் மக்கள் அலாதியான நம்பிக்கை வைத்திருப்பதை நான் அறிவேன். எமது பேர்வழி தொகுதி அமைப்பாளரும் எமது பிரதேச அரசியல் முன்னோடியுமான மதிப்பிற்குரிய இப்திகார் ஜெமீல் அவர்களது வழி காட்டலிலே எமது நகர சபை தேர்தலில் எமது நகர சபை நிர்வாகத்தில் 20 வருடங்களுக்கு மேல் அனுபவம் பெற்ற சேவை மனப்பான்மையுள்ள பலமான அணியொன்று அமர்ப்பிக்கப் பட்டுள்ளது. அவர்களோடு சேர்ந்து நாம் எல்லோரும் வெற்றி பெற்று நகர சபை அதிகாரத்தை கையில்லெடுப்போம்.

அதன் பின்னர் எமது அமைப்பாளரின் ஆலோசணையோடு சரித்திரம் பிரசித்தி பெற்ற பேருவளையையும் சீனன் கோட்டையையும் தலை சிறந்த முறையில் அபிருத்தியின் பால் அமைத்துக் காட்டுவோம்.

என்.பி.பி மக்களை ஏமாற்றும் கோமாளிகள் என்பதை மக்கள் நன்கு உணர்ந்துள்ளார்கள். அவர்கள் இனி வீழ்ச்சியின் விளிம்பிற்கு தள்ளப்படுவார்கள். சிலரின் அடி வருடிகள் தாமரை மொட்டை சேத்துக்குள் புதைத்து விட்டு மோட்டார் சைக்கிளை காட்டி வரும் பாசாங்கு எனது மக்கள் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை இந்தத் தேர்தலிலே தொலைபேசி சின்னத்துக்கே மக்கள் பேராதரவு அலை மேலே எழுந்து கொண்டே வருகிறது. எமது வெற்றி உறுதி !

நன்றி என்றார்.



# பேருவளை நகர சபையை எம்மிடம் ஒப்படையுங்கள்

## உல்லாசபுரியாக மாற்றுவோம்

### வேட்பாளர் மஸாஹிம் முஹம்மத்

பேருவளை பி.எம் முக்தார்

**முன்னால் பேருவளை நகர பிதாவும் சிரேஷ்ட அரசியல்வாதி தேசமான்ய மர்ஹூம் பாக்கிர் மாக்காரின் சகோதரியின் புதல்வருமான மஸாஹிம் முகம்மத் எதிர்வரும் மே 6ஆம் திகதி நடைபெறவுள்ள பேருவளை நகர சபைக்கான உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி தொலைபேசி சின்னத்தில் போட்டியிடுகிறார். இவர் நன்கு அறியப்பட்ட அனுபவம் வாய்ந்த பழுத்த அரசியல்வாதி என்ற போதிலும் அவர் எமது வாசகர்களுக்காக வழங்கிய செவ்வியை இங்கு சுருக்கமாக தருகிறோம்.**

**வினா : உங்களைப் பற்றிய சிறிய அறிமுகத்தோடு எமது நேர் காணலை ஆரம்பிப்பது நல்லதல்லவா?**

**மஸாஹிம் :** நான் பேருவளை மருதானையைச் சேர்ந்த சாலி ஹாஜியார் மரிக்கார் முஹம்மத் – சுர்ரதுல் யகீமா (மைமூனா) தம்பதியின் புதல்வராக 1954 ஜூலை 21ஆம் திகதி பிறந்தேன். 1960ஆம் ஆண்டு அல் பாஸியத்துல் நஸ்ரியா (பெண்கள்) பாடசாலையில் சேர்ந்து ஆரம்பக் கல்வியைப் பெற்றேன். தொடர்ந்து மஸல மத்திய கல்லூரி மற்றும் கொழும்பு டீ. எஸ். சேனாநாயக்க கல்லூரி ஆகியவற்றில் இடைநிலைக் கல்வியை பெற்று பின்னர் தர்கா நகர் ஸாஹிராக் கல்லூரியில் உயர் கல்வியைப் பெற்றேன். அப்போது உயிரியல் பாடத்தில் திறமைச் சித்தி பெறத் தவறியதன் விளைவாக வைத்திய பீடம் நுழைந்து டாக்டராகும் வாய்ப்பை இழந்தேன். இந்த நிலையிலேயே இரத்தினக் கல் வர்த்தகத்தில் இறங்கினேன்.
இதன் முதல் கட்டத்திலேயே 1975ஆம் ஆண்டு பேருவளை ஜெம் பியுரோ நிறுவனத்தை ஆரம்பித்து வர்த்தகத்தை முன்னெடுத்தேன். பேருவளை பொல வீதியில் ஸ்தாபிக்கப்பட்ட ஜெம் பியுரோ நிறுவனத்தின் 50ஆவது வருட பொன்விழா அன்மையில் இந்த வருடம் மார்ச் மாதம் விமர்சையாக கொண்டாடப்பட்டது.

**வினா : எப்போது, எப்படி அரசியலுக்குள் வந்தீர்கள்?**

**மஸாஹிம் :** 1977ஆம் ஆண்டு எனது தாய் மாமனார் எம்.ஏ. பாக்கிர் மாக்கார் பாராளுமன்ற பொதுத் தேர்தலில் ஜே.ஆர். ஜயவர்தன தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சியின் பேருவளை தொகுதி வேட்பாளராக களமிறங்கியிருந்தார். அவரது தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் நான் மும்முரமாக ஈடுபட்டேன். அவர் அமோக பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார். அந்த சந்தர்ப்பமே எனது முதல் அரசியல் ஈடுபாடாக அமைந்தது.

**வினா : அந்த ஈடுபாட்டோடு உங்களது அரசியல் பயணம் எப்படி நகர்ந்தது?**

**மஸாஹிம் :** நான் 1983ஆம் ஆண்டு நடைபெற்ற பேருவளை நகர சபைக்கான தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி சார்பாக போட்டியிட்டு 130 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி வாய்ப்பை இழந்தேன். இன்று வரை தொடர்ந்து நடைபெற்ற சகல தேர்தல்களிலும் வெற்றி பெற்றே வந்துள்ளேன். எமது கட்சி நகர சபையைக் கைப்பற்றிய போது மூன்று சந்தர்ப்பங்களில் நகராதிபதியாக பதவியேற்று அரும் பணியாற்றியுள்ளேன்.
நான் வெற்றி பெற்று எமது அணி தோல்வியை தழுவிய 2 சந்தர்ப்பங்களில் எதிர் கட்சி தலைமை பொறுப்பிலிருந்து எமது பிரதேச வளர்ச்சியில் எனது உயர்ந்த பட்ச பங்களிப்பை வழங்கியுள்ளேன். இந்த 2025ஆம் ஆண்டு நகர சபை தேர்தலிலும் ஐக்கிய மக்கள் சக்தி சார்பாக களமிறங்கியுள்ளேன்.

**வினா : பேருவளை - அழுத்கம பிரதேசங்கள் அடிக்கடி இனக் கலவரங்கள் மூளும் பகுதிகளாகும். அந்த வகையில் கலவர நிலைமையில் அரசியல்வாதி என்ற அடிப்படையில் உங்களது நிலைப்பாடு எப்படி அமைந்திருந்தது?**

மஸாஹிம் : நான் பணிகள் மேற்கொள்ளும் போது சகல இன, மதத்தவர்களையும் உரவணைத்தே சமமாக பணியாற்றுவதே எனது பண்பாகும். அரசியல் வாதிகளுக்கு மட்டுமன்றி ஒரு மனிதனிடம் காணப்பட வேண்டிய பண்பும் இதுவாகும். இன, மத கலவரங்களின் போதும் நடுநிலை நின்றே கருமமாற்ற வேண்டும். பாதிப்புக்குள்ளானவர்களுக்கு உரிய பாதுகாப்பை வழங்குவதோடு அவர்களுக்கு நிதியைப் பெற்றுக் கொடுப்பதிலும் முன்னின்று செயலாற்ற வேண்டும். குற்றமிழைக்கும் தரப்புக்கு உரிய தண்டனை கிடைக்கவும் பாரபட்சமற்ற முறையில் நடந்து கொள்ள வேண்டும். இந்த நிலைப்பாட்டிலிருந்தவாறே நான் இறந்த கால கலவரங்களின் போது கடந்து வந்துள்ளேன். பாதிக்கப்பட்ட பல முஸ்லிம் குடும்பங்களுக்கு நஷ்ட ஈடும் கடைகள், வீடுகளின் புணரமைப்புக்கான பணிகளும் மேற்கொள்ளப்பட்டமையை பலரும் அறிவர். பதவியில் இருந்த வகையில் இவற்றில் எனது பங்களிப்பும் கூடிய பட்சமாக அமைந்திருந்தன. நான் துணிச்சலுடன், பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு நேரடியாகச் சென்று மக்களுக்கு ஆறுதல் கூறுவதோடு நின்று விடாது அவர்களுக்கு தேவையான நிவாரண பணிகளிலும் ஈடுபட்டுள்ளதை சம்பந்தப்பட்ட மக்கள் நன்கறிவார்கள்.

**வினா : இனக் கலவரங்களின் போது உங்கள் சேவைகள் குறித்து அறியலாமா?**

**மஸாஹிம் :** 2004ஆம் ஆண்டு நிகழ்ந்த சுனாமி அனர்த்தமே இலங்கையின் கடற்கரை பிரதேசங்களை வெகுவாக பாதிப்புக்குள்ளாக்கிய சம்பவமாகும். சுமார் 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட உயிர்களை காவு கொண்டதோடு பல கோடிக்கணக்கான சொத்துடைமைகள் நாசமாக்கப்பட்ட துயர் நிறைந்த இயற்கை அனர்த்தமாகும். எனது பேருவளை ஊர் பகுதி மட்டுமல்லாது பாதிக்கப்பட்ட இதர இடங்களுக்கும் சென்று தொண்டர் நிறுவனம் பணிகளில் ஈடுபட்டதை ஆண்டு தோறும் டிசம்பர் 26ஆம் திகதி நினைவு கூறுகிறேன்.
எமது கடற்கரையை அண்டி வாழ்ந்த கடற்றொழிலாளர்கள் வெகுவாக பாதிக்கப்பட்டனர். பின்னர் இவர்களுக்கான இழந்த படகுகளுக்காக புதிய வள்ளங்கள் பெற்றுக் கொடுப்பதிலும் சேதமான வள்ளங்களை புணரமைத்துக் கொடுப்பதிலும் என்னாலான உதவி,



நிவாரணங்களை பெற்றுக் கொடுக்கவும் மனிதாபிமான அடிப்படையில் நான் சலைக்காது பணியாற்றியுள்ளேன். கடற்றொழிலாளர்களை ஊக்குவிக்க அவர்களுக்கு தேவையான மீன்பிடி உபகரணங்களும் சுனாமி காலத்திலும் பின்னரான சந்தர்ப்பங்களிலும் வழங்கியுள்ளேன். சுனாமியால் சேதமடைந்த அல் பாஸியதுல் நஸ்ரியா மகளிர் வித்தியாலயம் பிரிதோர் இடத்துக்கு நகர்த்தப்பட விருந்தது. அதன் வரலாற்று முக்கியத்துவ இடம் கருதி அதே இடத்தில் இருக்கும் வகையில் பகிரத பிரயத்தனம் எடுத்து அவ் விடத்திலேயே புனரமைத்து கொடுக்கவும் பணியாற்றி உதவியுள்ளேன். எனது சமூகத்திற்காக மிகவும் சமயோசிதமாக இத்தகைய சேவைகளைச் செய்துள்ளேன்.
இதே போன்று சுனாமியால் சேதமடைந்த பிற சமுகத்தவர்களினது பாடசாலைகள், கட்டிடங்கள் புணரமைப்பு பணிகளும் நடந்தேறியுள்ளன. 1988%89 காலப் பகுதியில் ஜே.வி.பி. கட்சியின் போது எமது மக்கள் அடங்கியொடுங்கி பெட்டிப்பாம்பாக வீடுகளுக்குள் முடங்கியிருந்த சந்தர்ப்பத்தில் நான் எனது சகாக்களுடன் மக்கள் குடியிருப்புக்குள் துணிவுடன் புகுந்து மக்களை தைரியமூட்டினேன்.

**வினா : நஸ்ரியா மகளிர் வித்தியாசாலய விடயத்தில் சமயோசிதமாக நடந்து கொண்டதை போன்று வேறு சந்தர்ப்பங்களும் உள்ளனவா?**

**மஸாஹிம் :** ஆம் அராபியர் வர்த்தகத்துக்காக வந்திறங்கிய இடத்தைக் குறிக்கும் துறை முகத்தின் படம் மற்றும் முஸ்லிம் வரலாற்றின் மற்றொரு சான்றாக கெச்சிமலை பள்ளியின் படங்கள் பொறிக்கப்பட்டதே பேருவளை நகர சபைக்குரிய சின்னமாக அன்று முதல் எமது முன்னொடிகளால் புகுத்தப்பட்டு வந்தது. ஒரு சில இனவாதிகளின் தலையீட்டால் அந்த சின்னம் மாற்றியமைக்கும் எத்தனம் நடந்த போது நான் சமயோசிதத்தைக் கையாண்டு அதே சின்னம் தொடர்ந்திருக்க வழி செய்து இனவாதிகளின் சதி நாடகத்திற்கு முற்றுப் புள்ளி வைத்தேன். அதே போன்று எமது பள்ளிக்குத் திரும்பும் வீதி மருங்கே புத்தர் சிலையொன்று வைக்கும் முயற்சியொன்றும் இடம்பெற இருந்த சந்தர்ப்பத்தில் அதனையும் அங்கு வைக்காதவாறு அவர்களது யோசனையை திசை திருப்பச் செய்தேன். இதே வேளை எமது பேருவளை நடுச் சந்தியில் பௌத்தர்களது சிலை ஒன்றை அமர்த்துவதில் மறைந்த எமது முஸ்லிம் அரசியல் வாதி ஒருவரின் முட்டாள் தனத்தை இங்கு நினைவு கூற விரும்புகிறேன். எனவே சமயோசிதமும், தைரியமும் நல்ல அனுபவமும் வாய்ந்த அரஈசியல்வாதிகளையே எமது மக்கள் தேர்ந்தெடுக்க வேண்டும். அப்போது தான் எமது சமூகம் எதிர் நோக்கும் சவால்களை சமாளித்து எங்களால் தலை நிமிர்ந்து வாழலாம். எமது பாரம்பரிய வரலாற்றைப் பேணிப் பாதுகாக்க முடியும்.

**வினா : ஆளுமை, அனுபவம் பற்றிக் குறிப்பிட்டீர்கள். இப்போது ஐக்கிய மக்கள் சக்தியால் அமர்த்தப்பட்டுள்ள வேட்பாளர்களுக்கு மேற்படி தகைமைகள் உள்ளனவா?**

**மஸாஹிம் :** ஆம். பேருவளை தொகுதி எமது பிரதம அமைப்பாளர் இப்திகார் ஜெமீல் அவர்களின் வழிகாட்டலுடனே நல்ல தகைமையும் அனுபவமும் ஆற்றலும் மிக்க சிறந்த வேட்பாளர் அணியொன்று அமர்த்தப்பட்டுள்ளது இவர்கள் மூலம் எமது பிரதேசம் உயர்ந்த பட்ச சேவைகளை பெற்றுக் கொள்ளக் கூடிய வாய்ப்புள்ளன.
நிறுத்தப்பட்டுள்ள 9 வேட்பாளராகளும் ஒருவரை ஒருவர் சளைத்தவர் அல்லர்.
எமது நகர சபையில் 5 தடவைகள் வெற்றி பெற்று 3 முறைகள் நகராதிபதியாகவும் 2 தடவைகள் எதிரணி தலைவராகவும் இருக்கும் என்னுடன் உப தலைவர், எதிரணித் தலைவர், பதவிகளுடன் நகர சபையில் கால் நூற்றாண்டு அனுபவமுள்ள ஹஸன் பாஸி ஹாஜியார் மற்றொரு உபதலைவராகவும் நீண்ட அரசியல் அனுபவமும் வாய்ந்த பேரினச் சகோதரர் விமலசிரி சில்வா, நகர சபையில் உறுப்பினராக அனுபவம் பெற்றவர்களான முஸ்பிர் ஷாபி, ஹிஸாம் முனவ்வர், ஹம்ஸா உவைஸ் ஆகிய 6 வேட்பாளராகளும் அனுபவ சாலிகள். இவர்களுடன் இதர மூவரும் நல்ல திறமை, ஆற்றல்கள் உள்ளவர்களே. இத்தகைய சிறப்பான அணி, வேறு எந்த வேட்பாளர் அணிகளிலும் இல்லவே இல்லை.
ஏனைய வேட்பாளராகளில் நகர சபைக்குண்டான சட்ட திட்ட விதிகள் தெரிந்தவர்கள் பூச்சியம் என்றால் மிகையாகாது.
சபை அதிகாரிகளிடம், ஒப்பந்தக்காரர்களிடம் எப்படி வேலை வாங்க வேண்டும், நாம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்ற திறமை, ஆற்றல், ஆளுமை உள்ளவர்களாலே தான் நகர சபையை வழிநடத்த முடியும். இத்தகைய அணி ஒன்றே எங்களிடம் உள்ளது.

**வினா : நீங்கள் அரசியல் பழி வாங்களுக்ககும் உள்ளாக்கப்பட்டீர்கள் அல்லவா?**

**மஸாஹிம் :** ஆம். தென் மாகாணத்தின் அஹுங்கலயில் என்னால் உருவாக்கப்பட்ட நூதன மிருக காட்சி சாலை உலகத்திலேயே ஐந்தாவது இடத்தில் இருந்த பெருமையால் எமது நாடு உலகிலே மிகவும் உன்னதமாக பேசப்பட்டுக் கொண்டே வந்தது. அரசியல் பழிவாங்களால் அது இழுத்து மூடப்பட்டு இல்லாமலாக்கப்பட்டது. இதனால் நான் பெரும் இழப்பீட்டை சந்தித்தேன். என்னை விட எமது தாய் நாடு அடைந்த நஷ்டம் தான் எழுத்தில் வடிக்க இயலாதது. எதிர் கட்சி ஆட்சியாளர் என்னை வஞ்சம் தீர்க்கச் செய்ததில் எமது நாடு தான் அவர்களால் வஞ்சகம் தீர்க்கப்பட்டது. என்றே கூறலாம். ஏனெனில் நாட்டுக்கு இருந்த உலகப் புகழ் ஒன்று எமது எதிர் தரப்பால் குழி தோண்டி புதைக்கப்பட்டதே அவர்கள் கண்ட பயனாகும்.

**வினா : வேறு குறிப்பிடத்தக்க பணிகள் ஏதும் உள்ளனவா?**

**மஸாஹிம் :** 2002%03 காலப்பகுதியில் எமது பேருவளை நகர சபையால் வீதி வாரம் எனும் வேலைத்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. அதில் இப்பகுதியின் பல வீதிகள் புனரமைப்புச் செய்யப்பட்டன. வடிகான் அமைத்தல், திருத்துதல், உடைந்த மடகுகளை செப்பனிடதல் , மின் விளக்குகள் இல்லாத வீதிகளுக்கு மின் விளக்குகளை பொறுத்துதல், குப்பைகளை அகற்றுதல் என்று பலதரப்பட்ட பணிகளும் எனது தலைமையில் முன்னெடுக்கப்பட்டு நகரம் புதுப் பொழிவு பெற்றது.
அடுத்து முன்னால் அமைச்சரும் எமது முன்னோடியுமான இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் வீடமைப்பு அமைச்சராக இருந்த போது அவருடன் இணைந்து எமது பிரதேசத்தின் சதுப்பு நிலப் பகுதியான வத்திமிபுரயில் குடிநீர், மின்சார வசதிகளுடன் கூடிய 175 வீடுகள் உள்ளடக்கிய பாரிய குடியேற்றத் திட்டம் ஒன்று உருவாக்கிக் கொடுக்கப்பட்டது.
அதே பகுதியில் பலஸ்தீன மக்களின் அனுசரணையோடு பலஸ்தீன விடுதலை வீரர் மர்ஹூம் ஸயீத் அரபாத் நினைவாக பள்ளிவாசல் ஒன்றும் அமைத்துக் கொடுக்கப்பட்டது. எமது நகர சபையில் பிரேரணை ஒன்று கொண்டு வரப்பட்டு அங்குள்ள வீதிக்கு "யஸீத் அரபாத் வீதி" என்ற நாமமும் சூட்டப் பட்டது. எனது அடுத்த முயற்சியால் இழந்த குடியிருப்புப் பகுதியில் ஜேர்மன் நாட்டு மக்களின் உதவியோடு தாய்-சேய் சுகாதார மத்திய நிலையம் ஒன்றும், சேதமடைந்திருந்த வாசிகசாலையை புணர் நிர்மாணம் செய்தும் கொடுக்கப்பட்டது. மேலும் அங்கு உடற்பயிற்சி நிலையம் ஒன்றும் அமைத்துக் கொடுக்கப்பட்டது. வத்திபுர விளையாட்டு மைதானமும் புதுப் பொழிவு படுத்தப்பட்டது.
கடந்த எனது பரிபாலனத்தின் போது எமது நகரசபைக்கு உட்பட்ட 22 வீதிகள் காபட் இடப்பட்டு புணர் நிர்மாணம் பெற்றது. எஞ்சியுள்ள வீதிகள் புணர் ஜெம்மம் பெற இந்த தேர்தலில் எமது தொலைபேசி சின்னத்திற்கு வாக்களித்து எமது அணியிடம் நகர சபையை ஒப்படையுங்கள். நகரை உல்லாச புரியாக்குவோம்.
ஜனாஸாக்களை எரித்து முகம் காட்ட முடியாது மாறு வேடம் பூண்டு சுயேட்சை அணியாக வந்து வாக்கு கேட்கும் கோமாளிகளிடம் ஏமாளியாக வேண்டாம். கடந்த தேர்தல்களில் மாற்றம் நாடி வாக்களித்து ஏமாற்றம் கண்டதை மறந்து விட வேண்டாம். ராஜ பக்ஷாக்களையும் விஞ்சி அவர்கள் எமது ஜனாஸாக்களை எரித்தார்கள். இந்த செஞ்சட்டைக் காரர்களோ எம்மை உயிருடன் எரிப்பதற்கு ஈடாக எமது தலையை தடவிக் கொண்டே எமது உரிமைகளை பரித்துக் கொண்டே இந்தியாவின் மோடியையும் "ரோ" வையும் எமது பரம வைரி மொஷாட் இஸ்ரேலையும் திர்ப்திப்படுத்திக் கொண்டே இருக்கிறார்கள்.
இந்த குட்டி தேர்தலில் இவர்களைக் குட்ட வைப்போம், சந்தர்ப்பத்தை தவற விட வேண்டாம். எமது அயல் ஊர்களான வியாங்கல்லை, வெளிப்பண்ண, பலாந்த உள்ளிட்ட பகுதிகள் அடிக்கடி வெள்ளத்தில் மூழ்கி மக்கள் பல்வேறு இன்னல்களுக்கும் இலக்காகிறார்கள். இத்தகைய சந்தர்ப்பங்களில் எல்லாம் எனது தலைமையிலான குழுவே படகுகள் மூலம் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு சென்று உடனடியான நிவாரண பணிகளில் ஈடுபட்டு அவர்களது அடிப்படை தேவைகளை வழங்குவதிலும் நாமே முன்னின்றுள்ளதையும் குறிப்பிட விரும்புகிறேன்.



# அம்பேபிட்டிய இரட்டை அங்கத்தவர் வட்டாரத்தில்

## மூன்று சமூக சேவையாளர்கள் போட்டி

**பேருவளை பி.எம் முக்தார்**

பேருவளைப் பிரதேச சபைக்கூறிய அம்பேபிட்டிய வட்டாரமானது, அம்பேபிட்டிய மரக்களாவத்த, பன்னில, கரந்தகொட, எகொடவத்த, புபுலந்த உள்ளிட்ட சிற்றூர்கள் பலவற்றை உள்ளடங்கிய பரந்த நிலப்பரப்பை கொண்ட பெரிய வட்டாரமாகும் சுமார் 9800 வாக்காளர்களைக் கொண்ட இரட்டை அங்கத்தவர் தொகுதி என்பதால் இவ் வட்டாரத்தில் ஐக்கிய மக்கள் சக்தி வேட்பாளர்களாக முஹம்மது நபாயிஸ் ,எண்டன் சுரேஷ் ஆகிய இருவர் அமர்த்தப்பட்டுள்ளனர் . இவர்களுக்கு மத்தியில் போனஸ் உறுப்பினர் பட்டியலில் பிரபல இளம் சமூக சேவையாளர் முகமது யாஸ்மின் யாசின் என்பவர் அமர்த்தப்பட்டுள்ளார். கட்சிக்கு கூடுதலான வாக்குகள் கிடைக்கப்பட்டு அம்பேபிட்டிய வட்டாரத்தில் கட்சியின் வேட்பாளர் இருவரும் வெற்றி பெறும் நிலையில் பட்டியலில் உள்ள முகம்மது யாஸ்மின் யாசினும் பிரதேச சபை பிரதிநிதியாக உள்வாங்கப்படுவார். என்பதில் ஐயமில்லை , யாஸ்மின் யாசின் சமூக நலப் பணிகளில் ஈடுபட்டு பிரதேச மக்கள் மத்தியில் நல்லபிமானம் பெற்றவர். வட்டார மக்களது சிபாரிசுகமையவே, ஐக்கிய மக்கள் சக்தி பேருவளை தொகுதி பிரதம அமைப்பாளர் இப்திகார் ஜெமீலின் வழிகாட்டலுடன் இவர் போனஸ் பட்டியலில் உள்வாங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது .

யாஸ்மின் அரசியல் ரீதியிலும் தனிப்பட்ட முறையிலும் பல தரப்பட்ட பொதுநலப் பணிகளில் தன்னை அர்ப்பணித் துக் கொண்டிருக்கிறார். குறிப்பாக பெருகமலை பகுதியில் உள்ள சிறு வீதிகளில் மின் விளக்குகள் ஒளிராத நிலையில் இருப்பதை கண்ட மாத்திரத்தில் உடனடியாக புது விளக்குகள் பொருத்தப்பட்டு அங்கு ஒளியேற்றி விடுவார். கடந்த ரமழான் நோன்பை எதிர்நோக்கி கொண்டு இருந்தபோது பல வீதிகள் இருள் சூழ்ந்து காணப்பட்டன. விடயம் இவர் கண்ணுக்குள் தெரிய வரவே துரிதமாக மின்விளக்குகளை பொருத்தி ரமழான் இரவுகளில் முஸ்லிம்கள் தம் சமயக் கடமைகளில் ஈடுபட வழிவகுத்ததை பலரும் நினைவு கூறுகின்றனர்.

மூவின மக்கள் வாழும் இப்பகுதியில் எல்லா மக்களுடனும் ஒன்றாக கலந்து அவர்களது சுக துக்கத்திலும் பங்கு கொள்ளும் பண்புடன் நடந்து கொள்வார். இத்தகைய பண்புகளே இவரை போனஸ் பட்டியலில் இணைக்க மக்கள் சிபாரிசு தூண்டியதெனலாம்.

இம்முறை பேருவளை பிரதேச சபை ஐக்கிய மக்கள் சக்தி கைப்பற்றி நீங்களும் உள்வாங்கப் பட்டால் அம்போபிட்டிய வட்டாரத்தில் நீங்கள் என்னென்ன பணிகளை மேற்கொள்ள உத்தேசித்தீர்கள் என்று இவரிடம் வினவப்பட்ட போது அவர் பதிலளிக்கையில் கூறியதாவது,

எமது பிரதேச சபையில் கிட்டத்தட்ட 10,000 தமிழ் ,முஸ்லிம், சிங்கள வாக்கா-ளர்களோடு







பெரிய நிலப்பரப்பை கொண்ட வட்டாரமாக எமது அம்பேபிட்டிய விளங்குகிறது. அத்துடன் ஐக்கிய மக்கள் சக்தியை ஆதரிக்கும் பெரும்பான்மையான ஆதரவாளர்களும் இங்கு காணப்படுகின்றனர். இந்நிலையில் இந்த வட்டாரத்திற்கு கூடுதலான பணிகளைச் செய்ய எமது கட்சி கடமைப்பட்டிருக்கிறது.

இன மத பேதங்களை கடந்து வட்டாரத்தை அபுவிருத்தியின் நிறைவுக்குக் கொண்டு செல்வதே எனது இலக்காகும்.

மக்கள் முறையிட வழி வைக்காமல் வீதி புனரமைப்பு, குப்பைகள் அகற்றுதல், வடிகான் திருத்தம், மின் கம்பங்களை சீர் செய்தல் என்பன எனது முதல் கட்டப் பணியாக உத்தேசிக்கின்றேன்.

எம்மை வழி நடத்திவரும் எமது அமைப்பாளர் இப்திகார் ஜெமீல் குப்பை முகாமைத்துவம் குறித்து சில திட்டங்களை முன்னெடுக்க உள்ளதாக குறிப்பிட்டுள்ளார். அவரது ஆலோசனையுடன் எமது வட்டாரத்தில் மாத்திரமல்ல பேருவளை தொகுதியிலும் குப்பை பிரச்சினை தொடராது அதற்கு தீர்வினை பெற்றுக் கொடுப்போம்.

இப் பகுதிக்கு விளையாட்டு மைதானம் மற்றும் ஆரம்ப பாடசாலை ஒன்றின் தேவைகளும் இருக்கின்றன. இவை எனது இரண்டாம் கட்டப்பணியாக எடுத்துள்ளேன். இதற்கு மாகாண சபை பாராளுமன்ற உதவிகளை நட வேண்டியுள்ளது. எமது மூத்த அரசியல் தலைவர்களின் ஆலோசனைகளோடு மேற்படி பணிகளை செய்ய அல்லாஹ் அருள் புரிய வேண்டும்.

எனவே எமது வட்டாரத்தோடு பிரதேச சபையையும் வென்றெடுக்க எமது மக்கள் தொலைபேசி சின்னத்துக்கு வாக்களிக்க வேண்டுமென அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

நான் போனஸ் பட்டியலில் தெரிவாகும் நிலையில் பேரினச் சகோதரர் எண்டன் சுரேஷ் மற்றும் எமது சகோதரர் நபாயிஸ் இருவரும் வெற்றி பெற்று நாம் கைகோர்க்கும் போது இன ஐக்கியம் மேலோங்கி மகிழ்ச்சியும் அமைதியும் நிரம்பிய சூழல் ஒன்றைக் காணலாமல்லவா?

வேட்பாளர் முகம்மத் நபாயிஸ் குறிப்பிடுகையில், யாஸ்மின் யாஸின் அவர்களோடு கைகோர்த்து அவர் முன்வைத்து சேவைகளை எனதும் உத்தேசமாகும். இவற்றை நாம் மூவரும் இணைந்து முன்னெடுக்க எமக்கு ஆதரவு தாருங்கள் என்றார்,

வேட்பாளர் எண்டன் சுரேஷ் பேருவளை, பொல்கொட்டுவ புனிதமான ஆலயத்தின் செயலாளர், எகொடவத்த ஐக்கிய கிராமம் அபிவிருத்தி சங்கத்தின் அமைப்பாளர், பேருவளை பொலிஸ்-பொதுமக்கள் பிரிவு தலைவர், ஆகிய பதவிகளை வசித்து வரும் பிரதேசத்தின் பிரபல சமூகத் தொண்டராவார். தேச மான்ய, சமாதான நீதிவானாகிய பட்டங்களுக்கும் சொந்தக்காரர். இப்பகுதியில் இனக்கலவரங்களில் போது அமைதியை நிலைநாட்டி இன ஐக்கியத்திற்கு பலமாக அமைந்தவர் தான் இவர். இவரது உரையின் சுருக்கம் : யாஸ்மின் நபாயிஸ் சொன்னது போல இந்த வட்டார அபிவிருத்தியின் எனது உயர்ந்த பட்ச பங்களிப்பை நல்குவேன். அவற்றிற்கு புறம்பாக மரங்களாவத்த - எகொடவத்தயை இணைக்கும் மதகு சிறு பாலம் சிர்திருத்தம், எமது தாழ்நிலங்கள் மழைக்காலத்தில் வெள்ளப்பெருக்கால் நிரப்பும் அனர்த்தத்திற்கு முடிவு காணல் எனவும் எனது வேலை திட்டத்தில் உள்ள பணிகளாகும். அத்துடன் எமது சிங்கள சமூக கடற்த்தொழிலாளர் களிடையே மது, போதை பாவணையால் ஏராளமான ஆண், பெண்கள் சிறையில் வாடுகிறார்கள் அவர்களது பிள்ளைகள் வீடுகளிலே பராமரிப்பின்றி முடங்கி கிடக்கின்றார்கள் இவர்களது கல்வி, சுகாதார உள்ளிட்ட புனர் வாழ்விக்கு எமது பிரதேச சபையால் அனுசரணைகளைபெற்றுக் கொடுப்பதும் எமது பணிகளில் உள்ளன என்றார்.



# பேருவளை நகர சபை வேட்பாளர்களைச் சந்தித்த பிரதமர் ஹரிணி





**(பீ.எம் முக்தார்)**

பிரதம மந்திரி கலாநிதி. ஹரினி அமரசூரிய அன்மையில் (23) பேருவளை சீனன்கோட்டைக்கு விஜயம் செய்தார்.

சீனன்கோட்டை நளீம் ஹாஜியார் மாவத்தையில் உள்ள அன்ஸார் யூஸ/ப் ஹாஜியாரின் இல்லத்தில் பேருவளை நகர சபை தேர்தலில் போட்டியிடும் தேசிய மக்கள் சக்தி வேட்பாளர்களுடன் பிரதமர் இதன் போது கலந்துரையாடினார்.

சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சர் டாக்டர். நளின்ந்த ஜயதிஸ்ஸ, மக்கள் விடுதலை முன்னணி பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா, தேசிய மக்கள் சக்தி களுத்துறை மாவட்ட நிறைவேற்றுக் குழு உறுப்பினர் அஷ்ரூஸ் அஸாத் உட்பட தேசிய மக்கள் சக்தியின் முக்கியஸ்தர்கள் பிரதமருடன் வருகை தந்திருந்தனர்.

தேசிய மக்கள் சக்தி நகர சபை தலைமை வேட்பாளர் மபாஸின் அஸாஹிர் தலைமையில் வேட்பாளர்கள் பிரதமருடன் கலந்துரையாடினர். தேசிய மக்கள் சக்தியின் பெருமளவிலான ஆதரவாளர்களும் இதன் போது வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கற்பிட்டி கண்டக்குழி வட்டாரத்தின் ஸ்ரீ லங்கா முஸ்லீம் காங்கிரஸ் பிரச்சாரக் காரியாலயத் திறப்பு



**(எம்.எச்.எம்.சியாஜ்)**

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கற்பிட்டி பிரதேச சபையின் கண்டக்குழி வட்டாரத்திற்கான ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரச்சார காரியாலயம் பள்ளிவாசல் துறையில் வேட்பாளர் முயிஸ்தீன் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் முன்னாள் வடமேல் மாகாண சபை உறுப்பினரும் ஸ்ரீ லங்கா முஸ்லீம் காங்கிரஸ் கட்சியின் உயர்பீட உறுப்பினருமான எஸ்.எச்.எம்.நியாஸ், ஏ.எச்.எம் .பைஷரூஸ், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கற்பிட்டி அமைப்பாளரும் உயர் பீட உறுப்பினருமான எம் எச் எம் ஹில்மி மற்றும் கற்பிட்டி பிரதேச சபைக்கு போட்டியிடும் வேட்பாளர்களான மௌலவி றிப்கான்(றஹ்மானி), முயீஸ்தீன் ஆகியோருடன் நூற்றுக்கணக்கான கட்சியின் போராளிகளும் கலந்துகொண்டமையும் குறிப்பிடத்தக்கது.




# கம்பிரிகஸ்வெவ வட்டாரத்தில் அரசியல் கட்சிகள் தீவிர பிரச்சாரம்

**(எம்.ரீ.ஆரிப்)**

அனுராதபுரம் மத்திய நுவரகம் பிரதேச சபை தேர்தலில் அழுத்கம, அசறிக்கம, கம்பிரி கஸ்வெவ மற்றும் ஹெலம்ப கஸ்வெவ ஆகிய கிராம அலுவலர் பகுதியை உள்ளடக்கிய கம்பிரிகஸ்வெவ வட்டாரத்தில் போட்டியிடும் கட்சிகளின் வேட்பாளர்கள் தீவிர பிரச்சார நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறித்த வட்டாரத்தில் ஐக்கிய தேசிய கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி ,ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி உள்ளிட்ட கட்சிகள் களமிறங்கியுள்ளன .இருந்த போதிலும் ஐக்கிய தேசிய கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி ஆகிய இரு கட்சிகளிடையே பலத்த போட்டி நிலவுகின்றது.

இந்த வட்டாரத்தில் ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் ஆப்தீன் முசாதிக் மற்றும் ஐக்கிய தேசிய கட்சி சார்பில் இஸ்மாயில் அஷ்ரப் உள்ளிட்ட இருவரும் தேர்தலில் களமிறங்கியுள்ளனர். தேர்தல் நெருங்கிக் கொண்டு வரும் நிலையில் வேட்பாளர்கள் வீடுவீடாகச் சென்று வாக்குகளை பெற்றுக்கொள்ளும் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருவதை அவதானிக்க கூடியதாகவுள்ளது.

இந்த வட்டாரத்தில் போட்டியிடும் கட்சி சார்ந்த வேட்பாளர்கள் தான் சார்ந்த கட்சியே வெற்றி பெறும் என்ற நோக்கில் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர். அதே நேரம் தேசிய மக்கள் சக்தி வேட்பாளரும் வீடுவீடாகச் சென்று வாக்குகளை தேடுவதையும் அவதானிக்க கூடியதாகவுள்ளது.



# முஸ்லிம்கள் திசைகாட்டிக்கு வாக்களிப்பது இஸ்ரேலுக்கு ஆதரவு வழங்குவதற்கு சமம்

## இம்ரான் எம்.பி

(எஸ்.ஏ. பறூஸ்)

முஸ்லிம் மக்கள் திசைகாட்டிக்கு வாக்களிப்பது முஸ்லிம் மக்களை ஈவிரக்கமின்றி கொன்று குவிக்கும் இஸ்ரேலை ஆதரிப்பதற்கு சமமாகும் என திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ஷுரூப் தெரிவித்தார்.

கிண்ணியாவில் கடந்த வெள்ளிக் கிழமை(25) இடம்பெற்ற உள்ளூராட்சி தேர்தல் தொடர்பான மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு அவர் தெரிவித்தார்.

அங்கு அவர் கருத்து கூறியதாவது, இந்த அரசாங்கம் இஸ்ரேலைத் திருப்திப்படுத்த வேண்டும் என்பதற்காக முஸ்லிம்கள் மீது அடக்கு முறைகளைப் பிரயோகித்து வருகின்றது. இஸ்ரேலின் மனிதாபிமானமற்ற செயலைக் கண்டித்து ஸ்டிக்கர் ஒட்டிய இளைஞர் ருஸ்தியை பயங்கவரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்தமை இதற்கு நல்ல உதாரணமாகும்.

இஸ்ரேலியர்கள் இலங்கையில்



அவர்களது சமயத்தலங்கைளை அமைப்பதற்கு அனுமதி வழங்கியுள்ள அரசாங்கம் அதற்கு அரச பாதுகாப்பை வழங்கி வருகின்றது. பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் இது தொடர்பில் அண்மையில் பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பிய போது சரியான பதில் கொடுக்க முடியாது அரசாங்கம் மழுப்பிய விடயம் நம் அனைவருக்கும் தெரியும்.

பொத்துவில் அருகம்பேயில் யூதர்கள் பாலர் பாடசாலை நடத்த அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளதோடு அதற்காக 5க்கும் மேற்பட்டோருக்கு நீண்ட நாள் விசா வழங்கி வருகின்றது. இதனால் அவர்கள் நிரந்தரமாக இங்கு தங்கி உள்ளார்கள்.

இவர்களது பாதுகாப்பைக் காரணம் காட்டித் தான் பொத்துவில் பகுதியில் முஸ்லிம்கள் சிலர் கைது செய்யப்பட்டமை அனைவருக்கும் நினைவில் இருக்கும்.

அருகம்பே பகுதியில் பாலர் பாடசால நடத்துகிறோம் என்ற போர்வையில் யூதர்கள் நிரந்தரமாக ஏன் தங்கி உள்ளார்கள் என்பது குறித்து நாம் சிந்திக்க வேண்டும். இங்கிருந்து முஸ்லிம்களுக்கெதிரான சதித் திட்டம் ஏதும் தீட்டப் படுகின்றதா என்ற சந்தேகம் எழுகின்றது.

இலங்கையில் உள்ள சட்டத்தின்படி தனியார் எவரும் இலங்கை பாடத் திட்டத்தைப் போதிக்கின்ற தனியார் பாடசாலை நடத்த முடியாது. ஆனால் அருகம்பேயில் பாலர் பாடசாலை நடத்த யூதர்களுக்க அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது. இஸ்ரேலியர்கள் என்றால் சட்ட திட்டம் பார்க்கப்படாது என்பதற்கு இது நல்ல உதாரணமாகும்

இந்த அரசாங்கம் இஸ்ரேலர்களைப் போசித்து பராமரிக்கும் அளவுக்கு முஸ்லிம்களுக்கு எதிராக அடக்கு முறைகளைப் பிரயோகித்து வருகின்றது என்பதை நாம் இவற்றிலிருந்து விளங்கிக் கொள்ள முடிகின்றது.

எனவே இந்த அரசாங்கத்துக்கு வாக்களிப்பதானது முஸ்லிம் மக்களை ஈவிரக்கமின்றி கொன்று குவிக்கும் இஸ்ரேலை ஆதரிப்பதற்கு சமமானது என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார்.




# உக்குவளை பிரதேச சபையில் பத்து கட்சிகள் போட்டி

(உக்குவல நிருபர்)

எதிர்வரும் மே மாதம் 6ம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் உக்குவளை பிரதேசசபைக்கு பதிவு செய்யப்பட்ட பத்து கட்சிகள் சார்பாக மூவினத்தைச் சேர்ந்த அபேட்சகர்கள் போட்டிக்காகக் களமிறங்கியுள்ளனர்.

தேர்தல் முடிவில் போட்டியிட்ட கட்சிகளில் அதிகப்படியான விருப்பு வாக்குகள் பெற்ற உறுப்பினர்கள் 17 பேர் தெரிவுசெய்யப்படுவதுடன் வாக்காளர்கள் பெற்ற விருப்பு வாக்குகளின்படி போனஸ் உறுப்பினர்களாக 12 பேருடன் மொத்த உறுப்பினர்களாக 29 பேர் இப்பிரதேசசபைக்கு உள்வாங்கப்படுவர் இந்நிலையில் அந்நத்த கட்சிகள் சார்பாக களமிறங்கி போட்டியிடும் அபேட்சகர்கள் தாம் வெற்றிபெறும் நோக்கில் துண்டுப்பிரசுரங்களை ஆங்காங்கு வாக்காளர்கள் பார்வைக் காக ஒட்டியிருந்தாலும் காட்சிப் படுத்தப்பட்ட பெரியளவிலான பதாதைகள் என்பனவற்றை பொலீசார் அகற்றிவருகின்றனர். கட்சி அபேட்சகர்கள் தம் கட்சிப் பணிகளுக்காக பிரதேசத்தில் ஆங்காங்கு கட்சிக் கிளை காரியாலயங்களையும் திறந்து வைத்திருப்பதையும் இவர்களுள் குறிப்பிட்டசிலர் வீடுவீடாகச் சென்று வாக்காளர்களைச் சந்தித்து உரையாடிச் செல்வதையும் காணமுடிகிறது.



# மருதானை பாஸிய்யா ஸாவியாவில் பெரிய கந்தூரி

**( பேருவளை பீ. எம். முக்தார்)**

இலங்கையின் முதலாவது பள்ளி வாசலான 1100 ஆண்டுகள் பழமைமிகு வரலாற்றுப் புகழ்மிக்க பேருவளை மருதானை மஸ்ஜிதுல் அப்ரார் பள்ளிவாசலுடன் இணைந்த பாஸிய்யா ஸாவியாவில் 158வது ஷாதுலிய்யா மனாகிப் தமாம் பெரிய கந்தூரி மஜ்லிஸ் எதிர் வரும் 28-4-2025 திங்கட்கிழமை மாலை கலீபதுல் க்ஹுலபா முஹம்மது ஸுஹ்ர் மௌலவி பாரி தலைமையில் நடைபெறும்.

ஷாதுலிய்யாத் தர்க்காவின் கலீபதுல் ஹுலபாவும், காலி அலிய்யா இஸ்லாமிய சட்டக் கல்லூரி பணிப்பாளரும், காலி மாவட்ட ஜம்மியத்துல் உலமாவின் தலைவருமான சங்கைக்குறிய மௌலவி அல்-ஹாஜ் எம். இஸட் எம். முஹம்மத் ஸுஹ்ர் (பாரி) விசேட சொற் பொழிவாற்றுவர்.

மஸ்ஜிதுல் அப்ரார் பள்ளிவாசல் ஜமாஅத் சபை தலைவர், முன்னாள் இலங்கை வக்ஃப் சபை தலைவர், சிரேஷ்ட சட்டத்தரணி, அல்-ஹாஜ் தேசமான்ய எம்.ஏ.எம்.ஹனபி அவர்களின் வழிகாட்டலின் கீழ் பள்ளிவாசல் மற்றும் ஸாவியா நிர்வாக குழுவினர் இதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர். ஷாதுலிய்யா தரீக்காவின் ஸ்தாபகர் ஆத்மீக ஞானி அல் குத்தல் அக்பர் இமாம் அபுல் ஹஸன் அலியுஷ்ஷாதுலி (ரலி) அவர்களின் 860வது ஜனன தினத்தை முன்னிட்டும், ஆத்மீக ஞானி பாஸி நாயகம் (ரஹ்) அவர்களின் ஞாபகர்த்தமாகவும் இந்த மனாகிப் மஜ்லிஸ் மேற்படி ஸாவியாவில் 158வது வருடமாகவும் இடம் பெறுவதாக ஸாவியா தர்மகர்த்தாக்களின் ஒருவரான அல்-ஹாஜ் எம்.பயாஸ் ஜெஸுல் (ஜே.பி) தெரிவித்தார்.

மேற்படி மனாகிப் மஜ்லிஸ் கடந்த 19ம் திகதி மாலை மௌலவி ஹலீபதுஷ்ஷாதுலி அல் ஹாஜ் ரபீக் பஹ்ஜி தலைமையில் ஆரம்பமானது.

தினமும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் புகழ்மாலை ஆகிய ஹம்ஸிய்யாவும் மனாகிபுஷ் ஷாதுலி புகழ்மாலை ஓதப்படுவதுடன் எதிர்வரும் 28ம் திகதி தமாம் நிகழ்வு



தந்தூரியுடன் நிறைவு பெறுகிறது. கலீபதுஷ்ஷாதுலி அல்ஹாஜ் அஸ்ஸய்யித் அலவி மௌலானா முர்சி, சீனன் கோட்டை ஜாமியத்துல் பாஸியதுஷ் ஷாதுலிய்யா கலாபீட பணிப்பாளர் கலீபதுஷ்ஷாதுலி மௌலவி அல்ஹாஜ் எம். ஜே. எம். பஸ்லான் ஜெஸ/ல் (அஷ்ரபி - பீ.ஏ.) அகில இலங்கை ஜம்மியதுல் உலமா சபை நிறை வேற்றுக் குழு உறுப்பினர் கலீபதுஷ்ஷாதுலி அல்ஹாஜ் இஹ்ஸானுத்தீன் அபுல் ஹஸன் (நளீமி)




கல்பதுஷ்ஷாதுலிகளான மௌலவிகள் எம்.எம்.ஸெய்னுலாப்தீன் (பஹ்ஜி) முஹம்மத் இல்யாஸ் ஆலிம் எம்.ஐ.எம் .பாறூக் (மக்கி) மஸ்ஜிதுல் அப்ரார் இமாம்களான மௌலவி முகர்ரம் அஸ்ஹரி மௌலவி நிசாத் அலவி , முஹம்மத் அல்பாஸி கல்லூரி அதிபர் மௌலவி பைஸல் காமில் ஸக்காபி உட்பட கலீபாக்கள், உலமாக்கள் இஹ்வான்கள், பள்ளிவாசல் மற்றும் ஸாவியா நிர்வாகிகள் என பலரும் தமாம் மஜ்லிஸில் பங்கு பற்றுவர்.

# இளைஞர்களைக் கொண்டு இளைஞர்களை பயிற்றுவித்தல்





**(எம்.எச்எம்.சியாஜ்)**

புத்தளத்தில் பல்வேறு முன்மாதிரி வேலை திட்டங்களை கடந்த 2019ல் இருந்து முன்னெடுத்து வரும் தாருஸ்ஸலாம் இளைஞர் அணியானது இம்முறை இளைஞர்களைக் கொண்டு இளைஞர்களை பயிற்றுவித்தல் என்ற தொணிப் பொருளில் மூன்று நாள் பயிற்சி நெறியை அண்மையில் நடாத்தியது.

இதில் சுமார் 50க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கு பற்றி சான்றிதழ்கள் மற்றும் நினைவுச் சின்னங்களை பெற்றதோடு இந்த நிகழ்வுக்கு அதிதிகளாக முஸ்லிம் சமய மற்றும் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர்களுள் ஒருவரான நிஹ்மதுல்லா நிலோபர், தாருஸ்ஸலாம் இளைஞர் அணியின் ஆலோசனைக் குழு உறுப்பினரும், புத்தளம் எஸ்.ஈ.சீ. கல்வி நிலைய உரிமையாளருமான ஆசிரியர் ஏ.சீ.எம். ரிபாயிஸ், ஆலோசனைக் குழு உறுப்பினர்களுள் ஒருவரும் எக்ஸலன்ஸ் பாடசாலை அதிபருமான எச்.அஜ்மல், புத்தளம் பெரிய பள்ளியின் செயலாளர் சட்டத்தரணி அஸீம், புத்தளம் மாவட்ட செயலகத்தின் திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.ஏ.எம்.பர்ராஜ், பிரபல உளவல ஆலோசகர் அஷ்ஷெய்க் இஹ்ஸான் ஹாமித், ஆசிரியர் ஆசிரியர் ஹகீம், மாணவர்கள் பெற்றோர்கள் என அனைவரும் கலந்து சிறப்பித்தனர்

# தலதா வழிபாடு நிகழ்ச்சியை 27 ஆந் திகதியுடன் நிறைவு செய்யத் தீர்மானம்

**(ரஷீத் எம். றியாழ்)**

திட்டமிட்டபடி ஏப்ரல் 27ஆம் திகதி ‘தலதா வழிபாடு நிகழ்ச்சியை நிறைவு செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தியவதன நிலமே பிரதீப் நிலங்க தேல தெரிவித்தார்.

கடந்த (25) விசேட அறிக்கை யொன்றை விடுத்த போதே தியவதன நிலமே இவ்வாறு தெரிவித்தார்.

இந்த திகதி நீடிக்கப்படலாம் என்ற கருத்துகளுக்குப் பதிலளிக்கும் வகையிலேயே அவர் இவ்வறிக்கையை வெளியிட்டுள்ளார்.

இந்நாட்டு பௌத்தர்களின் சிகரமாக விளங்கும் பெரு மதிப்புக்குரிய ஸ்ரீ தலதாவை தரிசிக்கும் பெரும் வாய்ப்பு கடந்த 18ஆம் திகதி தொடக்கம் இலங்கையர்களுக்குக் கிடைத்தது. இந்த திகதியை நீடிக்கும் திட்டம் இல்லை என்றும் அவரது அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வாழைச்சேனை நஹ்ஜிய்யாவின் நீண்டகால பிரச்சினைக்கு தீர்வு

**(எஸ்.எம்.எம்.முர்ஷித்)**

வாழைச்சேனை அந்நஹ்ஜதுல் இஸ்லாமியா அரபுக்கல் லூரியில் நீண்டகாலமாக இருந்து வந்த திண்மக்கழிவு அகற்றல் பிரச்சினைக்கு வாழைச்சேனை வர்த்தக சங்கத் தலைவரும் சமூக செயற்பாட்டாளருமான எம்.எஸ்.றபீக் எடுத்துக் கொண்ட அயராத முயற்சியின் பயனாக இதற்கான தீர்வு எட்டப்பட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் கோறளைப்பற்று வாழைச்சேனை பிரதேச சபையின் செயலாளர் எஸ். ராஜ்கீதனுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் பயனாக இதற்கான தீர்வு எட்டப்பட்டுள்ளதுடன், வாரத்தில் மூன்று தினங்கள்



திண்மக்கழிவகற்றல் செயற்பாடுகளை முன்னெடுக்கப்படுமென பிரதேச சபை செயலாளர் உறுதியளித்துள்ளது. குறித்த நீண்டகாலப்பிரச்சினைக்கு தீர்வினைப்பெற்றுத் தந்த வாழைச்சேனை வர்த்தக சங்கத்தலைவரும் சமூக செயற்பாட்டாளருமான எம்.எஸ். றபீக் மற்றும் சபையின் செயலாளர் எஸ்.ராஜ்கீதன் ஆகியோருக்கு கல்லூரி நிருவாகிகள் நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டனர்.



# பேருவளை நகர சபையை வெற்றி கொள்வதில் ஆளும் கட்சிக்கு எந்த சவாலும் கிடையாது

## வேட்பாளர் ரிகாஸ் ஸாலி

**(பேருவளை. பீ. எம். முக்தார்)**

உள்ளூராட்சித் தேர்தலில் பேருவளை நகர சபையை வெற்றி பெறுவதற்கு ஆளும் தேசிய மக்கள் சக்திக்கு எந்தச் சவாலும் கிடையாது என சீனன் கோட்டை அக்கரகொட வட்டார வேட்பாளரும் பிரபல சமூக சேவையாளருமான ரிகாஸ் ஸாலி தெரிவித்தார்.

சீனன் கோட்டை நளீம் ஹாஜியார் மாவத்தையில் உள்ள அவரது இல்லத்தில் இடம் பெற்ற கூட்டமொன்றில் பேசும் போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

பெருமளவிலான ஆதரவாளர்கள் பங்கு பற்றிய இக் கூட்டத்தில் அவர் மேலும் கூறியதாவது,

பேருவளை நகர சபை தேர்தலில் மக்கள் எதிர் கட்சியினருக்கோ சுயேட்சை அணிக்கோ வாக்களிப்பதினால் எந்த பலனும் கிட்டப் போவதில்லை. ஆளும் கட்சிக்கு ஆதரவு வழங்குவதன் மூலம் நகர சபை பகுதியை துரிதமாக கட்டியெழுப்பலாம். பேருவளை மக்கள் இந்த நல்ல சந்தர்ப்பத்தை தவற விடக் கூடாது.

பேருவளை நகர சபை பகுதியில் உள்ள அனைத்து வளங்களையும் நன்கு பயன்படுத்தி அபிவிருத்தி பணிகளை செய்து மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதே தேசிய மக்கள் சக்தியின் நோக்கமாகும். பேருவளை வாழ் மக்கள் தேசிய மக்கள் சக்தியிடம் இம் முறை நகர சபையை ஒப்படைக்க முடிவு செய்துள்ளதை எமக்கான ஆதரவு மூலம் தெரிய வருகிறது.

ஊழல், இலஞ்சம் இல்லாத அதிகார துஷ்பிரயோகமற்ற நகர சபையாக பேருவளை நகர சபையை மாற்றியமைத்து மக்களுக்கு நல்ல பணிகளைச் செய்வோம்.

கடந்த 6 - 7 தசாப்தங்களாக இந்த நகர சபையை மாறி மாறி ஆட்சி செய்தவர்களினால் மக்களுக்கு சிறப்பான சேவையை பெற்றுக் கொடுக்க முடியாமல் போனது.

பேருவளை நகர சபை பிரிவின் நிலையோ மிகவும் பரிதாபமானது. தேர்தலில் பல வாக்குறுதிகளை



சொல்லி வாக்குகளைப் பெற்று பின்னர் அதனை மறந்து விடுகின்றனர்.

தேசிய மக்கள் சக்தி அரசின் ஆட்சியே உள்ளன.

அரசாங்கத்துடன் ஒத்துழைக்கக் கூடிய நகர சபையை மக்கள் தெரிவு செய்து நமது பகுதியை முன்னேற்றிக் கொள்ள முயல வேண்டும்.

அக்கரகொட வட்டார மக்களுக்கு திருப்திகரமான சேவைகளை பெற்றுக் கொடுப்பேன். பணம் சம்பாதிக்கவோ நகர சபை உறுப்பினர் பட்டத்தை வைத்து பெருமைப் படவோ நான் தேர்தலில் போட்டியிடவில்லை.

பிரதேச மக்களுக்கு சேவை செய்யும் இலக்குடன் களமிறங்கியுள்ளேன் என்றார்.

---

# பொத்துவில் அஸ்மினின் வாழ்க்கை வரலாற்று ஆங்கில நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது



**(றிபாஸ்)**

இலங்கையின் முன்னணி தமிழ்க் கவிஞரும், திரைப்படப் பாடலாசிரியருமான பொத்துவில் அஸ்மின் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை ஆவணமாகக் கொண்ட ஆங்கில நூல் "POTTUVIL ASMIN: From Pottuvil to the World – A Global Tamil Voice" என்ற தலைப்பில் Amazon Kindle வழியாக வெளியிடப்பட்டுள்ளது.

இந்நூல் வெளியீட்டு விழா, சமீபத்தில் சென்னையில் நடைபெற்ற நிகழ்வில் லைக்கா குழுமத்தின் தலைவர் அல்லிராஜா சுபாஸ்கரன், லைக்கா ஹெல்த் நிறுவனத் தலைவர் டாக்டர் பிரேமா சுபாஸ்கரன், மற்றும் லைக்கா புரொடக்ஷன்ஸ் தலைமை நிர்வாக அதிகாரி ஜி.கே.எம். தமிழ் குமரன் ஆகியோரால் சிறப்பாக வெளியிடப்பட்டது.

27 ஆண்டு காலமாக கலை, இலக்கியம், ஊடகம் மற்றும் சினிமா துறையில் குறிப்பிடத்தக்க அளவு பங்களிப்பு செய்திருக்கும் பொத்துவில் அஸ்மின் . நடிகர் விஜய் ஆண்டனியின் நான் திரைப்படத்தில் "தப்பெல்லாம் தப்பே இல்லை" என்ற பாடலின் ஊடாக தமிழ் சினிமாவில் அறிமுகமானவர்.

"விடியலின் ராகங்கள்", "விடை தேடும் வினாக்கள்", "பாம்புகள் குளிக்கும் நதி" ஆகிய கவிதை நூல்களை தமிழுக்கு தந்துள்ளார்.

மறைந்த தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள் நினைவாக கவிப்பேரரசு வைரமுத்து தொகுத்த "கலைஞர் 100 கவிதைகள் 100" கவிதை தொகுப்பிலும் இவரது கவிதை இடம்பெற்றுள்ளன.

மறைந்த தமிழக முதல்வர் ஜெயலலிதா அவர்களுக்கு இவர் எழுதிய இரங்கல் பாடல் "வானே இடிந்ததம்மா" அவரது சமாதியில் தொடர்ச்சியாக இரண்டு மாதங்கள் ஒலித்தன.

பொத்துவில் அஸ்மின் எழுதிய " "ஐயோசாமி நீ எனக்கு வேணாம்" பாடல் இலங்கையில் உருவாக்கப் பட்ட தமிழ் பாடல்களில் அதிக பார்வைகளை பெற்ற முதல் தமிழ் பாடலாகும்.

இலங்கையில் தேசிய மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் 30 மேற்பட்ட விருதுகளை பெற்றிருக்கும் பொத்துவில் அஸ்மின் கம்போடியா கலை கலாசார அமைச்சினால் "சர்வதேச கவியரசு கண்ணதாசன்" விருது வழங்கி கௌரவிக்கப்பட்டவர்.

பொத்துவில் அஸ்மின் வரிகளில் ஸ்ரீகாந்த் தேவா இசையில் "முல்லை சசி" குரலில் ஸ்ரீதர்மாஸ்டர், காயத்ரிசான் நடிப்பில் வெளியான "முட்டக்கண்ணி" ஆல்பம் பாடல், அமெரிக்காவில் அமைந்துள்ள சர்வதேச பாடலாசிரியர் சங்கம் (ISSA) வழங்கும் 2025ஆம் ஆண்டுக்கான விருதுக்கு சர்வதேச மட்டத்தில் சிறந்த வீடியோ பாடல் மற்றும் சிறந்த பாடலாசிரியர் என இரு பிரிவுகளில் தேர்வு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த ஆங்கில வாழ்க்கை வரலாற்று நூல், பொத்துவிலில் இருந்து உலகளாவிய தமிழ் குரலாக உயர்ந்த அஸ்மின் அவர்களின் பயணத்தை ஆவணப்படுத்துவதுடன், தமிழ் இலக்கியம் மற்றும் கலைத் துறையில் அவரது தாக்கத்தையும் பதிவுசெய்கிறது.

# அதிகமான உள்ளூராட்சி மன்ற சபைகளை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கைப்பற்றும்

**(றிபாஸ்)**

மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய ஒரு சபையாகவும், ஏனைய சபைகளுக்கொரு முன் மாதிரியானதாகவும் அட்டாளைச்சேனை பிரதேச சபையை மாற்றி அமைப்போம் என இக்ராஹ் வட்டார வேட்பாளர் உவைஸ் தெரிவித்துள்ளார்.

அட்டாளைச்சேனை பிரதேசத்தில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

தொடர்ந்தும் அவர் தனது உரையில் ,

கடந்த காலங்களில் நடைபெற்ற தேர்தல்களில் நூறு வீதம் வாக்களித்த ஒரு பிரதேசமாக அட்டாளைச்சேனை காணப்பட்டது. நடைபெறவுள்ள உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீமின் வழிகாட்டலின் கீழ் அம்பாறை மாவட்டத்தில் அதிகமான உள்ளூராட்சி மன்ற சபைகளை கைப்பற்றி ஆட்சி அமைப்பது மாத்திரமல்ல.

சகல இன மக்களின் நாளாந்த, அன்றாட தேவைகளை உடனுக்குடன் செய்கின்ற வேலைத் திட்டங்களையும் முன்னெடுத்துச் செல்வதே எமது நோக்கமாகும்.

தேர்தல் பிரச்சாரத்தில் வீடு வீடாக எங்களது வேட்பாளர்கள் செல்கின்ற போது மக்கள் தருகின்ற ஆதரவையும், அரவணைப்பையும் பார்க்கின்ற பொழுது அதிகமான வாக்குகளைப் பெற்று ஆட்சி அமைப்போம்



என்பதில் எவ்வித மாற்று கருத்தும் கிடையாது..

ஒலுவில், பாலமுனை, அட்டாளைச்சேனை போன்ற பிரதேசங்களில் தரமான, தகுதியான வேட்பாளர்களை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி நிறுத்தியுள்ளது.

ஆகவே அதிகாலை நேரத்தோடு சென்று உங்களது வாக்குகளை மரச் சின்னத்துக்கு அளிக்குமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.



# காத்தான்குடியில் தேர்தல் பிரச்சார காரியாலயங்கள் திறப்பு







**(நூருல் ஹுதா உமர்)**

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில், காத்தான்குடி நகர சபையில், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக போட்டியிடும் காத்தான்குடி மீராப்பள்ளி வட்டார வேட்பாளர் ஈ.எம். றுஸ்வின், காத்தான்குடி பதுரியா வட்டார வேட்பாளர் எம்.ஐ.எம். அஜ்வத் பலாஹி, காத்தான்குடி அன்வர் வட்டார வேட்பாளர் எம். எச்.எம். றிஸ்வி (BA) ஆகியோரை ஆதரித்து தேர்தல் பிரச்சார காரியாலயம் திறந்து வைக்கும் நிகழ்வு கடந்த (19) இடம்பெற்றது. ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கலாநிதி எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ் காரியாலயத்தை திறந்து வைத்து உரையாற்றினார். இந்நிகழ்வில், கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள், கட்சி முக்கியஸ்தர்கள், காத்தான்குடி பிரதேச கட்சியின் மத்திய முழு உறுப்பினர்கள், ஊர் பிரமுகர்கள், பொதுமக்கள் என பலரும் பங்கேற்றிருந்தனர்.

# பேருவளை மருதானை கூட்டத்தில் சஜித் பிரேமதாச பங்கேற்பு





பேருவளை நகர சபை மற்றும் பிரதேச சபை தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து மருதானையில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார கூட்டத்தில் எதிர்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச உரையாற்றினார். பேருவளை ஐக்கிய மக்கள் சக்தி பிரதம அமைப்பாளர் இப்திகார் ஜமீல் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் முன்னாள் நகர பிதா மஸாஹிம் முஹம்மத் , முன்னால் உப நகர பிதாக்களான ஹஸன் பாஸி , விமலசிரி சில்வா உட்பட வேற்பாளர்கள், முன்னால் எம்.பி.க்களான லக்ஷ்மன் விஜேமான்ன , எம்.எஸ்.எம். அஸ்லம் ஐக்கிய மக்கள் சக்தி பிரதி பொருலாளர் டாக்டர் ஷரூமி ஹாசிம், முன்னால் மாகான சபை உருப்பினர் எம்.எம். அம்ஜாத் உட்பட பலரும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். ஹெட்டியாகந்த வட்டார வேட்பாளர் மிஷ்பிர் சாபியின் தேர்தல் காரியாளயமும் எதிர் கட்சித்தலைவர் சஜித் பிரேமதாசவினால் திறந்து வைக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# ஆளுங்கட்சியை ஆதரித்து அபிவிருத்தியின் பங்காளராகுங்கள்..!

**கஹட்டோவிட்ட வட்டார வேட்பாளர் ஜவாத்**



எதிர்க்கட்சிகளுக்கு வாக்களித்து பிறகு கைசேதப்படுவதை விட ஆளுங் கட்சிக்கு வாக்களித்து அபிவிருத்தியின் பங்காளராகுங்கள் என கஹட்டோவிட்ட வட்டார தேசிய மக்கள் சக்தி வேட்பாளர் ஜவாத் வாக்காளர்களுக்கு அறைகூவல் விடுத்தார். ஓகொடபொலவில் நடைபெற்ற கட்சியின் கூட்டமொன்றில் ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில் ஜனாதிபதி தேர்தல் பாராளுமன்ற தேர்தல்களில் தேசிய மக்கள் சக்தியை பெரும்பான்மை பலத்துடன் வெற்றியீட்டச் செய்த நாங்கள் இந்த குட்டித் தேர்தலில் அரசாங்கத்தை எதிர்த்து எதிர்க்கட்சிகளுக்கு ஆதரவு வழங்குவோமாயின் அவர்கள் எம்மைப் பற்றி என்ன நினைப்பார்கள்.வாக்குகளை எதிர்க்கட்சிகளுக்கு வழங்கி அரசின் எதிர்ப்பை சம்பாதிப்பதா அல்லது அரசுக்கு ஆதரவளித்து அபிவிருத்தியின் பங்காளராவதா என்பதை வாக்காளர்களாகிய நீங்கள் சிந்தித்து பார்க்க வேண்டும்.எமது வட்டாரத்தில் ஆளுங்கட்சியை வெற்றி பெறச் செய்வதன் மூலம் ஊருக்கான அபிவிருத்தி திட்டங்கள் குறித்து உரிமையுடன் பேச முடியும். இதற்கு மேலதிகமாக அரசின் மூலமாக மேலும் பல்வேறு உதவிகளை பெற்றுக் கொள்ள முடியும். இந்த வட்டாரத்தில் ஏறத்தாழ 7500 வாக்குகள் உள்ளன.கஹட்டோவிட்டவில் 2100 வாக்குகளே இருக்கின்றன. ஏனைய 4400 வாக்குகளும் தீர்மானிக்கும் சக்தியாக விளங்கப் போகிறது. தீர்மானிக்கும் இந்த வாக்குகள் ஆளுங்கட்சிக்கு சார்பாகவே உள்ளன.எனவே இந்த வட்டாரத்தை தேசிய மக்கள் சக்தியே வெல்லுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார். இந்த கூட்டத்தில் வேட்பாளர் இன்ஷாப் உட்பட மேலும் பல கட்சி பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.






நாச்சியாதீவு பர்வீன்

# “கடல் முற்றம்” ஆர்த்தெழும் பெண் குரல்

**கடந்த வார தொடர்ச்சி...**

**லறீனா அப்துல் ஹக்**
(சிரேஷ்ட விரிவுரையாளர்,
மொழிகள் துறை,
சப்ரகமுவ பல்கலைக்கழகம்)

காவுகொடுக்கப்பட்டதால், செத்துப்போன ஓர் இதயத்தின் எரிப்பினைச் சுட்டப் பயன்படுத்தப் பட்டுள்ளது.

”மனிதர்கள் சுதந்திரமானவர்கள் அல்லர். அவர்கள் அதிகாரத்தால் அடிமைப்படுத்தப்பட்டவர்கள். அதிகாரத்தின் உரையாடல் அவர்களைக் கட்டுப்படுத்தி வைத்திருக்கிறது” (மேற்கோள்: சுரேஷ்,எம்.ஜி.,2009:93) என்ற ஃபூக்கோவின் கருத்து இங்கே ஒப்புநோக்கத்தக்கது. அதிகாரத்தின் உரையாடல் என்பது உண்மையில் பரஸ்பரமானதல்ல. மற்ற தரப்பின் எதிர்வினைக்கான வெளி என்பது அங்கே நிலவுவதில்லை. எனவே, அது பெரும்பாலும் ஒருவழிப் பாதையானதாகவே இருக்கும். அவ்வகையில், கட்டளைக்கு எத்தகைய எதிர்ப்பும் மறுப்பும் இன்றிக் கீழ்படிதலையே அது பதிலாக எதிர்பார்க்கும். இது எல்லா வகையான அதிகாரங்களுக்கும் பொருந்திப் போகும் பொது இயல்பாகும்.

அதிகாரத்தின் ஒடுக்குதலையும் அது ஏற்படுத்தும் தாக்கங்களையும் பல்வேறு கவிதை வரிகளில் பதிவு செய்திருக்கும் கவிதைசொல்லி, பிரபஞ்சவெளியில் கட்டுகளற்றுச் சஞ்சரிக்கும் அவாவினையும் சுயத்தின் வேட்கையினையும் தன் கவிதை வரிகளில் தவழவிடவும் தவறவில்லை. உதாரணமாக, ”கிரகங்கள் தனித்தியங்கத் தொடங்கு முன்பான ஆதிக்கனலில் இழை திரித்து சிறகு முடித்தே காலத்தைச் சுருட்டிக் கைப்பைக்குள் புதைத்தபடி ஏழுபூமி, ஏழுவானம் தாண்டியும் பெயர்கிற” முனைப்பினைச் சுட்டி நிற்கிறது, ”சிறுமீனாய்” (ப.54) எனும் கவிதை. இதனூடே, சுயாதீனத்தின் மீதான வேட்கையே எல்லா உயிர்களினதும் உயிர்ப்பின் சூட்சுமம் என்பதைத் தனது கவிதை வரிகளில் அழுத்தமாகப் பதிவுசெய்துள்ளார், ஃபாயிஸா அலி.

சிறுபான்மைக் கதையாடல்

சமுதாயம் என்பது எப்போதும் ஒரேமாதிரியானதாக நிலைபெற்று நிற்கும் ஒன்றல்ல் மேடுகளையும் பள்ளங்களையும் பல்வகை நிலங்களையும் தாண்டிச் சுழித்தோடும் நதியினைப் போல மாறிக்கொண்டே இருப்பது. இம்மாற்றம் காலமாற்றத்திற்கேற்ப நிகழ்ந்தபடியே இருக்கும். அது அவ்வக்கால இலக்கியப் பிரதிகளில் பிரதிபலிக்கவே செய்யும். இதனையே, “காலத்துக்குக் காலம் சமுதாயத்திலே தோன்றும் அரசியல், பொருளியல், சமூக, கலாசார, ஆன்மீக இயக்கங்கள் இலக்கிய ஆதிக்கத்தைப் பாதிக்கின்றன” என்கிறார், க. கைலாசபதி (அணிந்துரை, ஆக்க இலக்கியமும் அழகியலும், 1977:ஐஐஐ). அவ்வகையில், ‘இலக்கியம் என்பது உயர்ந்தோர் மாட்டே செல்வமும் ஆட்சி அதிகாரமும் கொண்டவர்களே அவ்வுயர்ந்தோர்’ என்ற நிலைப்பாடு உண்மையான ஒன்றாக நம்பவைக்கப்பட்டு, அவர்களின் களிப்பினதும் துய்ப்பினதும் பொருட்டு இலக்கியம் படைக்கப்பட்ட நிலமானிய நோக்குநிலை காலப்போக்கில் மாறிவிட்டது. பல்வேறு நுண்ணடுக்குகளைக் கொண்டதாகக் கட்டமைக்கப்பட்டு இருக்கும் சமுதாயத்திலே மையத்தில் இருந்து விளிம்புநிலைக்குத் தள்ளப்பட்ட அனைத்துத் தரப்பினரையும் அவரவர் நிலையில் நின்று கூர்ந்து நோக்கும் போக்கினைப் பின்னவீனத்துவ இலக்கிய விமர்சனம் ஆழ அகலப்படுத்தி உள்ளது.

இந்நிலையில்தான் சிறுபான்மைக் கதையாடல் பெரும் கவனக்குவிப்பினைக் கோரி நிற்கின்றது. ”பெருங்கதையாடல்கள் என்பது பேரடையாளத்துடனான ஒருமிப்பை வலியுறுத்தும் போது, சிறுகதையாடல் வித்தியாசத்தை முதன்மைப்படுத்துகிறது. மற்றதாக இருக்கும் உரிமை என்பது ஒரு தன்னிலை தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும் உரிமை அல்ல் மாறாக மற்றது மற்றதாக வெளிப்படுத்திக் கொள்ளும் உரிமை, நியதியிலிருந்து விலகும் உரிமை” (பின்நவீனத்துவம் - இலக்கியம் - அரசியல், 1996:67) என்கிறார் அ. மார்க்ஸ். இக்கூற்று, சாராம்சப்படுத்தப்பட்ட ஒருபடித்தான நிலை செயற்கையானது என்பதையும், பன்முகத்தன்மையே இயற்கையானது என்பதையும் வலியுறுத்துவதோடு, மற்றமையை அப்பன்முகத் தன்மையோடு ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியத்தையும் சுட்டிக் காட்டுகின்றது.

இதன்போது, ஒரு சமூகமானது மைய நீரோட்டத்தில் இருந்து முற்றாக விலகிச் சென்று தனக்கென ஒரு கண்ணுக்குத் தெரியாத வேலியை அமைத்துக்கொண்டு குறுங்குழுவாத உணர்வோடு செயற்படுவதில் உள்ள எதிர்மறை விளைவுகள் ஒருபுறம் எனில், சுய அடையாள அழிப்பினை வலியுறுத்தும் வகையில் மையத்தோடு இரண்டறக் கலந்து விடுமாறு பிரயோகிக்கப்படும் அழுத்தங்களினால் தோன்றும் சிக்கல்கள் மறுபுறம் எனத் தாக்கங்கள் பன்முனைப்பட்டவையாக அமைந்து விடுகின்றன. அவ்வகையில், தமக்கான தனித்துவமான ஒரு பண்பாட்டைக் கொண்ட இலங்கையின் சிறுபான்மை இனங்களின், குறிப்பாக முஸ்லிம் சமூகத்தின் பல்வேறு அக-புற நெருக்கடிகள், அரசியல் ரீதியான ஒடுக்குமுறைகள் குறித்த பதிவுகளை உள்ளடக்கிய ஏராளமான இலக்கியப் பிரதிகள் இலங்கையில் தோன்றியுள்ளன. என்றபோதிலும், அத்துறைசார்ந்து முஸ்லிம் பெண்களின் பதிவுகள் மிகக் குறைவானவையே. ஃபாயிஸா அலியின் கவிதைகள் இத்துறை சார்ந்தும் தனது கவனத்தைக் குவித்துள்ளமை நிச்சயம் பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

”தொழுகைத்தலங்கள்
நொறுக்கப்படுகையில்
சில காவிகளின்
கோணல்சொண்டுகளால்
என்மேலாடை
கிழிக்கப்படுகையில்
தரச்சான்றிதழ்




இழுபறிக்குள்
பிடிச்சோறும் தொண்டைக்
குழிக்குள் சிக்கித்திணறுகையில்
இன்னமும்
கண்ணுக்குத்தெரியாத
நுண்கயிறுகளால்
எம் குரல்வளைகள்
நெறிக்கப்படுகையில்” (மேலாடை கிழிக்கப் படுகையில்,ப.26) என,

ஒரு சிறுபான்மைச் சமூகத்தின் நெருக்கடிகள், அவர்கள் மீதான ஒடுக்குமுறைகளை அடையாளப்படுத்துகின்றன இக்கவிதை சொல்லியின் வரிகள். இலங்கையில் சுமார் மூன்று தசாப்த காலமாக இடம்பெற்ற யுத்தத்தினால் இந்நாட்டில் வாழ்ந்த எல்லாச் சமூகங்களும் பல்வேறு இடர்ப்பாடுகளை எதிர்கொள்ள நேர்ந்தமை வரலாறு. எனின், முஸ்லிம்களைப் பொருத்தவரையில் அவர்கள் இரண்டு பெரும்பான்மைச் சமூகங்களினாலும் பல்வேறு ஒடுக்குமுறைகளை எதிர்கொண்ட ஒரு சமூகமாகக் காணப்படுகின்றனர். இதனை ஃபாயிஸாவின் கவிதைகள் பதிவுசெய்யத் தவறவில்லை என்பதற்கு, ”வரியும் கப்பமுமாய்” (ப.28), ”கலிமாவிரல் பற்றி” (ப.62), ”தேசம்” (ப.70) ஆகிய கவிதைகளைச் சிறந்த உதாரணங்களாகக் குறிப்பிடலாம்.

”கருத்து வேறுபாடுகளின் கருத்தொருமிப்பே சனநாயகமான ஒன்றிணைவாக இருக்க முடியும்” (பின்நவீனத்துவம் - இலக்கியம் - அரசியல், 1996:46) என்கிறார், அ.மார்க்ஸ். அவ்வகையில், பெருங்கதையாடல்களில் உடைப்பு நிகழ்கையில், ஏற்படக்கூடிய வெற்றிடத்தினை நிரப்பும் மாற்று நிலையாகவே சிறுகதையாடல்களை நாம் அடையாளப்படுத்தலாம். “எனவே சாராம்சப்படுத்தப்பட்ட குழு அடையாளங்களையும், மூடிய முரண் எதிர்வுகளையும், கட்டுடைப்பதே பின் நவீனத்துவத்தின் பணி. சாராம்சப்படுத்தப்பட்ட குழு அடையாளத்திற்குப் பதிலாகப் பன்முகத் தன்மையான, மாற்றிக் கொள்ளத்தக்க, புனைவுக் கூறுகளுடன் கூடிய அடையாளம் என்பதை வைப்பதன் மூலம் அடையாளத்தின் சுருக்க முடியாத்தன்மை வற்புறுத்தப்படுகிறது” (அ மார்க்ஸ், 2001:25) என்பதன் மூலம், ஒற்றைத்தன்மையான, சாராம்சப்படுத்தப்பட்ட அடையாளத் திணிப்பு என்பது சனநாயகபூர்வமானதல்ல என்பதையும், பெருங்கதையாடலின் வழி அத்திணிப்பு மேற்கொள்ளப்படுகையில் முரண்பாடுகள் கூர்மையடைந்து சனநாயக விழுமியங்கள் சிதைக்கப்படும் அபாயம் நேர்கின்றது என்பதையும் புரிந்துகொள்ளலாம். இலங்கையில் ஏற்பட்ட மூன்று தசாப்தகால யுத்தமும் அதன் பின்விளைவுகளும் கிளைத்து வளர்ந்ததன் பின்புலத்திலும் நாம் இதனை இலகுவாக இனங்கண்டு கொள்ளக்கூடியதாக உள்ளது.

பொதுநிலையில் ஒரு படைப்பாளி சமூக அவலங்கள் குறித்துக் குரல்கொடுத்து வருவது இயல்பு. எனின், தான் சார்ந்த சமூகம் ஒடுக்கப்படுகையில் அதற்காகக் குரல் கொடுப்பது அப்படைப்பாளியின் தார்மீகக் கடமை ஆகின்றது. இன்னொரு வகையில் சொல்வதானால், ஒடுக்குமுறை தலைகாட்டும் இடங்களில் எல்லாம் தன்னடையாளத்தினை வெளிப்படுத்திக் கொள்கிறது சிறுகதையாடல். அவ்வகையில், சிறுகதையாடலானது சமூகம் சார்ந்தும், பொருளாதாரம், தொழில், குடும்பம், சமயம் முதலான சமூக நிறுவனங்கள் சார்ந்தும் மையநிலையில் இருந்து விளிம்புக்குத் தள்ளப்பட்ட சமூகத்தின் குரலாய்த் தன்னை வெளிக்காட்டிக் கொள்கின்றது. என். சண்முகரத்தினம் குறிப்பிடுகையில், ”ஒரு கலைஞனின் அக நிலையை - அவனது ஆற்றலை - மூன்று முக்கிய பண்புகள் நிர்ணயிக்கின்றன. அவை, அவன் காட்டமுற்படும் நிலைமைகளோடு அவனுக்குள்ள அனுபவமும் பங்குபற்றலும் அவனது வர்க்க நிலைப்பாடு அவனது அழகியல் ரசனையும் விழுமியங்களும் என்பனவாகும். அவற்றிற்கிடையே உணர்வு பூர்வமாக அவன் ஏற்படுத்தும் தாக்க எதிர்த்தாக்கம் அவனது தரத்தை நிர்ணயிக்கின்றன. அவன் கலை ஆக்கத்திலீடுபடும்போது தன் அகநிலையைச் சொற்களால் வெளிப்படுத்துகிறான். இக்கட்டத்தில் அவனது சிந்தனை ஒழுங்கும், மொழி ஆற்றலும் அவனது வெற்றிக்கு உதவுகின்றன. இவை அவனது ஆக்கத் திறனுக்குத் தேவையானவை” (ஆக்க இலக்கியமும் அழகியலும், 1977:125-126) என்கின்றார். அவ்வகையில், ஃபாயிஸா அலியின் கவிதைகள் விளிம்புக்குத் தள்ளப்பட்டு, ஒடுக்குமுறைகளுக்கு உள்ளாக்கப்படும் சிறுபான்மைச் சமூகத்தின் குரலை உரத்து ஒலிக்கச் செய்வதை அவதானிக்கலாம். இதற்கு,

“தொடராய் கடற்தளத்திலிருந்து
எனதூருக்கூடாய்
சம்பூர் வரைக்குமாய்
ஏவப்பட்டதில்
வீட்டுச்சுவர்களையும்
துளையிட்ட சில தீப்பொறிகளை
பிறிதொரு ரமழான் இரவில்
அநேகப் பெண்கள் நெஞ்சப்
பரப்பெங்கிலும்

அச்சத்தைக் கீறிச் சென்றவனின்
தனித்த காலடிகளையும்

அதைத்துரத்தி வந்த ஆத்திரக்
கொந்தளிப்புகளையும்” (கடல்
முற்றம், ப.30)

எனும் வரிகளையும், 1990 ஆம் ஆண்டில் வடபுலத்தில் இருந்து வெளியேற்றப்பட்டு சொந்த நாட்டிலேயே ஆண்டுக்கணக்கில் அகதிகளாய் அலைந்து திரிந்துவிட்டு சொந்த ஊருக்குத் தீராத காதலோடு திரும்பும் மண்ணின் மைந்தர்களின் ஏக்கத்தைப் பிரதிபலிக்கும் வகையில் அமைந்த,

”நெடுநாள் தாண்டி
கூடு திரும்பிய முதல் பண்டிகை
குறை தரத்திலேனும்
தொழுகைக்கொரு புத்தாடை
முதல் மஸ்கட் அச்சுப்பணியாரம்
வட்டிலப்பமெனப்
பலகாரம் பண்ணுமளவு சுய
வருவாய்
நெடுநாள் தாண்டி
கூடிக் கொண்டாடப்
போகிறோம்
பட்டாசொலி மட்டுமே
கேட்குமொரு பெருநாள்”
(மீளக்குடியமர்தல், ப.71)

எனும் கவிதையையும் உதாரணங்களாகக் குறிப்பிடலாம். முழுக்க முழுக்க ஓர் அகதிச் சமூகத்தின் வாழ்நாள் கனவை ஒருசில வரிகளுக்குள் பொதித்துத் தரும் இக்கவிதைக்குள் வேட்டுச் சத்தம் ஒலிக்காத, அமைதி நிறைந்த புத்துலகொன்றினைப் படைக்க விழையும் கவிமனதின் சாத்வீக எதிர்பார்ப்பும் எட்டிப்பார்க்கின்றது.

எம். ஜி. சுரேஷ், “அதிகாரம் என்பது பாதிக்கப்பட்ட விளிம்புநிலைவாதிகளை மட்டுமல்ல் ஆதிக்கம் செலுத்தும் மையவாதிகளையும் மறு உருவாக்கம் செய்கிறது. அதிகாரமும் அறிவும் ஒன்றையொன்று சார்ந்திருக்கின்றன. அறிவின் நீட்சியாக அதிகாரமும் அதிகாரத்தின் நீட்சியாக அறிவும் இருக்கின்றன.” (பின் நவீனத்துவம் என்றால் என்ன?, 2009:85) என்கிறார். அவ்வகையில், ஃபாயிஸா அலியின், ”தங்கை ரிசானாவிற்கு” (ப.76) எனும் கவிதை மிக முக்கியமானது. பணிப்பெண்ணாகச் சவூதி அரேபியாவுக்குச் சென்ற சிறுமி றிஸானா நஃபீக், அநியாயமாகக் கொலைக்குற்றம் சுமத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்ட கோரநிகழ்வினை மனம் பதறும் வகையில் சொல்லோவியமாய்த் தீட்டியுள்ளார் ஃபாயிஸா. றிஸானாவுக்கு நடந்த அநீதியின் போது, விதிவிலக்காக எழுந்த வெகுசில தனிநபர்களின் எதிர்ப்புக் குரல்களை விடுத்துப் பார்த்தால், முஸ்லிம் சமூகத்தின் பிரதிநிதிகளாகத் தம்மைப் பறைசாற்றிக் கொள்ளும் இலங்கை ஜம்மியத்துல் உலமாவும் சரி, இலங்கை முஸ்லிம் சமூகத்தின் ஆன்மீக ஆதிக்கம் தம்வசம்

அடுத்த வாரம் தொடரும்...



# இஸ்ரேல் பிரகடனப்படுத்தியுள்ள “காஸா சூனியப் பிரதேசம்”

## பாலஸ்தீன மக்களுக்கு மேலும் நெருக்கடி!

**(எம்.ஐ.அப்துல் நஸார்)**

காஸாவின் தெற்கு நகரமான ரபாவை துண்டித்து, அப் பிரதேசத்தை பல பகுதிகளாகப் பிரிக்கும் மற்றுமொரு இராணுவ நடவடிக்கையினை பூர்த்தி செய்துள்ளதாக இஸ்ரேல் கடந்த வார இறுதியில் அறிவித்தது.

காஸா பகுதியில் இஸ்ரேல் தொடர்ந்து தனது இராணுவ நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி வருகிறது. இதன காரணமாக, குண்டுவீச்சுகள் தொடரும் அதே வேளை, காசாவின் 2.3 மில்லியன் மக்களில் அதிகமானோர் எப்போதும் மிகவும் சனநெரிசலுக்குள் வாழ வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை, இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சர் இஸ்ரேல் காட்ஸ், தெற்கு காசா பகுதியில் இஸ்ரேலிய பாதுகாப்புப் படைகள் பெரிய நிலப்பரப்பைக் கைப்பற்றியதாகக் தெரிவித்தார்.

ரபா மற்றும் கான் யூனிஸ் இடையே காஸாவைக் கடக்கும் மொராக் பகுதிய இஸ்ரேலிய பாதுகாப்புப் படை தற்போது கையகப்படுத்தியுள்ளது, இது பிலடெல்பியா மற்றும் மொராக்கிற்கும் இடையிலான முழுப் பகுதியையும் இஸ்ரேலிய பாதுகாப்பு வலயத்தின் ஒரு பகுதியாக மாற்றுகிறது“ என்று காட்ஸ் அறிக்கையொன்றில் தெரிவித்தார்.

எக்ஸ் தளத்தில் அவர் இட்ட பதிவில் “காசா சிறியதாகவும் தனிமைப்படுத்தப்பட்டதாகவும் மாறும், மேலும் அதன் குடியிருப்பாளர்களில் அதிகமானோர் சண்டை நடக்கும் பகுதிகளிலிருந்து வெளியேற வேண்டிய கட்டாயம் ஏற்படும்“ என அவர் மேலும் தெரிவித்தார். யுத்தத்தை நிறுத்துவதற்கு ஹமாஸை அகற்ற வேண்டும்“ என பாலஸ்தீனர்களை அவர் வலியுறுத்தினார்.

இஸ்ரேலிய அரசாங்கம் அதன் தாக்குதலை தீவிரப்படுத்தவும், காஸாவின் பெரும்பகுதியைக் கைப்பற்றவும் உறுதிபூண்டிருந்தது. பல நாடுகளால் பயங்கரவாதக் குழுவாக பெயரிடப்பட்டுள்ள ஹமாஸ், மீதமுள்ள 59 பணயக்கைதிகளை விடுவிக்கவும், அவர்களில் 24 பேர் உயிருடன் இருப்பதாக நம்பப்படும் புதிய போர்நிறுத்த விதிமுறைகளை ஏற்றுக்கொள்ளவும் அழுத்தம் கொடுத்துள்ளது.

### பாதிக்கப்படும் பொதுமக்கள்

மீண்டும், காசாவின் பொதுமக்கள் பாதிப்புக்களை எதிர்நோக்கி வருகின்றனர். யுத்தத்திற்கு முன்னர், காஸாவின் தென் பகுதியிலுள்ள உள்ள ரபா ஆளுநர் பிரதேசத்தில் சுமார் 200,000 பேர் வசித்து வந்தனர்.

ஜனவரி மாதம் தற்காலிக யுத்த நிறுத்தம் அமுலுக்கு வந்த பின்னர் அப்துல் ரஹ்மான் தாஹா ரபாவில் உள்ள தனது பகுதிக்குத் திரும்பியபோது, “வீட்டின் ஒரு சிறிய பகுதி மட்டுமே எஞ்சியிருப்பதைக் கண்டார்“ அந்தக் குடும்பம் அவர்களின் முந்தைய வீட்டின் இடிபாடுகளுக்குள் தங்கியிருந்தது. ஏப்ரல் மாத ஆரம்பத்தில், இஸ்ரேலிய இராணுவம் குடியிருப்பாளர்களுக்கு இடமாற்ற உத்தரவுகளை பிறப்பித்தது, மேலும் தாஹாவுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் மீண்டும் வெளியேற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

ரபா கிட்டத்தட்ட முழுமையாக அழிக்கப்பட்டுள்ளது. மிகக் குறைந்த வீடுகளே எஞ்சியுள்ளன. தெருக்கள் ஏற்கனவே இடிந்து போயுள்ளன, அவை மீண்டும் கட்டப்பட வேண்டும். தற்போது அவர்கள் தேவை முடிந்த பின்னர் மீதமுள்ளவற்றை அழிக்கப் போகிறார்கள்,“ என்று தாஹா கூறினார், அவர் தற்போது போது கான் யூனிஸில் ஒரு கூடாரத்தில் மிகவும் சிரமத்திற்கு மத்தியில் வசித்து வருகிறார்.

மார்ச் மாத ஆரம்பத்தில் யுத்த நிறுத்தத்தின் முதல் கட்டம் முடிவடைந்ததன் பின்னர், இஸ்ரேலிய அரசாங்கம் காஸாவிற்கு எரிபொருள், உணவு, வர்த்தக மற்றும் மனிதாபிமான விநியோகங்களை நிறுத்தியது. “யுத்தம் ஆரம்பமானதிலிருந்து 18 மாதங்களில் இல்லாத அளவுக்கு மனிதாபிமான நிலைமை தற்போது மிக மோசமாக இருக்கலாம்“ என்று ஐக்கிய நாடுகள் சபை திங்களன்று எச்சரித்தது.

“யுத்தம் முடிந்துவிட்டது என்று நாங்கள் நினைத்தோம் ஆனால், அது பழிவாங்கலுடன் மீள ஆரம்பமாகியுள்ளது, 24 மணி நேரமும் இடைவிடாமல் இரத்தம் சிந்தப்படுகின்றது,“ என் அபூ தாஹா தெரிவித்தார். “ தொடர்ந்தும் குழப்ப நிலை காணப்படுகின்றது. உள்நாட்டு பாதுகாப்பு நிலைமை மோசமடையத் தொடங்குகிறது. இது ஒரு பயங்கரமான உணர்வினை ஏற்படுத்தியுள்ளது.“ எனவும் அவர் தெரிவித்தார்.

மார்ச் மாதத்தில் இஸ்ரேலிய இராணுவம் தாக்கும்போது பாலஸ்தீன மக்கள் ரபாவிலிருந்து கான் யூனிஸூக்கு ஓடினார்கள்

51 வயதான பாலஸ்தீனர் ஒருவர் தனது சொந்த ஊர் தற்போது ஒரு “பாதுகாப்பு சூனிய வலயத்தின்“ ஒரு பகுதியாக மாறிவிட்டதாக கவலைப்படுகிறார். புதிதாக உருவாக்கப்பட்ட மொராக் நுழைவுப் பிரதேசம், கிழக்கிலிருந்து மேற்காக சுமார் 12 கிலோமீட்டர் (7 மைல்) நீளமுள்ள ஒரு நில வழித்தடமாகும், இது கான் யூனிஸலிருந்தும் ரபாவையும் அதன் அண்டை நாடான எகிப்துடனான எல்லைக் கடவையையும் துண்டிக்கிறது.

மொராக் என்பது 2005 இல் அகற்றப்பட்ட முந்தைய இஸ்ரேலிய குடியேற்றமொன்றின் பெயராகும். அதே போல் மத்திய காஸாவில் உள்ள நெட்சாரிம் நுழைவுப் பிரதேசம், இது வடக்கு காசாவிலிருந்து தெற்குப் பகுதியைப் பிரிக்கிறது. சோதனைச் சாவடிகள் மூலம் இரு பகுதிகளுக்கும் இடையிலான மக்கள் நடமாட்டத்தினை இஸ்ரேலிய பாதுகாப்புப் படை கட்டுப்படுத்துகிறது. யுத்த நிறுத்தத்தின் போது இராணுவம் இப்பகுதியை விட்டு வெளியேறியது, ஆனால் மார்ச் மாதத்தில் மீண்டும் அங்கு குவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேல் எங்களை எமது வீடுகளுக்கு மீளத் திரும்புவதைத் தடுப்பதற்காக “மிரட்டவும் அரசியல் அழுத்தத்தை ஏற்படுத்தவும்“ விரும்புகிறது என அபு தாஹா நம்புகிறார். இருப்பினும், “பிரச்சனை என்னவென்றால், காஸாவின் எதிர்காலம் எப்படி இருக்கப்போகின்றது என்பது தெரியவில்லை“ எனவும் அவர் தெரிவித்தார்.

இஸ்ரேலிய அரசாங்கம் காஸாவில் அடுத்த நாளுக்கான எந்தத் திட்டங்களையும் பகிர்ந்து கொள்ளவில்லை, மேலும் அதன் நகர்வுகளை ஹமாஸ் மீதான அதன் அதிகபட்ச அழுத்த மூலோபாயத்தின் ஒரு பகுதியாக சித்தரித்துள்ளது. இஸ்ரேலிய அரசாங்கம் நீண்டகால இராணுவக் கட்டுப்பாட்டிற்கான அடித்தளத்தை அமைத்து வருவதாக மனித உரிமைகள் குழுக்கள் கூறுகின்றன. இஸ்ரேலுடனான காஸா எல்லைப் பகுதியை பல்வேறு பகுதிகளாகப் பிரிப்பதன் மூலம், ஏற்கனவே உள்ள சூனியப் பிரதேசத்தை விரிவுபடுத்துகின்றது.

### மக்களின் புதிய இடம்பெயர்வு

அண்மைய தாக்குதலால் புதிதாக இடம்பெயர்ந்த சுமார் 400,000 பேரில் அபு தாஹாவும் ஒருவர் என ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான விவகாரங்களுக்கான ஒருங்கிணைப்பு அலுவலகம் (ருழுஊர்யு) தெரிவித்துள்ளது. ஜனவரியில் யுத்த நிறுத்தத்தின் போது லட்சக்கணக்கான இடம்பெயர்ந்த மக்கள் தெற்கிலிருந்து வடக்கு நோக்கித் திரும்ப முடிந்தாலும், தற்போது பலர் மேற்கு நோக்கிச் செல்லுமாறு இஸ்ரேலிய இராணுவத்தால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான விவகாரங்களுக்கான ஒருங்கிணைப்பு அலுவலகத்தின் கூற்றுப்படி, கிட்டத்தட்ட 70 வீதமான பிரதேசங்கள் “இடமாற்ற உத்தரவு“ அல்லது “தடைசெய்யப்பட்ட“ வலயங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன, அங்கு மனிதாபிமான குழுக்கள் தங்கள் இயக்கங்களை ஒருங்கிணைக்க வேண்டும் என இஸ்ரேலிய அதிகாரிகள் கோருகின்றனர். இஸ்ரேலிய இராணுவம் பலமுறை இந்த வெளியேற்றங்கள் பொதுமக்களை தீங்கு விளைவிக்காமல் இருக்க வேண்டும் என்று கூறி வருகிறது, மேலும் சிலர் பாலஸ்தீன போராளிகள் அண்மையில் இஸ்ரேலுக்குள் ரொக்கெட்டுகளை வீசிய பகுதிகளை குறிவைத்துள்ளனர்.

ஒரு திட்டத்தை வலுக்கட்டாயமாக மாற்றுவதற்கு சமம் என் ஐ.நா. குறிப்பிடும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்பின் சர்ச்சைக்குரிய “இடமாற்றத் திட்டம்“ தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் காட்ஸ் 2.3 மில்லியன் காஸா மக்களுள் “ஆர்வமுள்ள அனைவருக்கும்“ ஏனைய நாடுகளுக்கு “தன்னார்வ அடிப்படையில் செல்ல விரும்புபவர்களுக்கு“ அனுமதியளிக்கப்படும் என்று வார இறுதியில் மீண்டும் வலியுறுத்தினார்.

விரிவாக்கப்பட்ட சூனியப் பிரதேசம் கிராமங்கள் மற்றும் விவசாய நிலங்களை உள்ளடக்கியுள்ளது.

பிரதேசத்தின் இடமாற்றம் மற்றும் பிரிப்புக்கு மேலதிகமாக, இஸ்ரேல் படிப்படியாக காஸாவின் உள்ளே ஏற்கனவே இருக்கும் சூனியப் பிரதேசத்தை மேலும் விரிவுபடுத்தியுள்ளது, இது வடக்கிலிருந்து கிழக்கில் இஸ்ரேலுடனான எல்லைப் பகுதியில் எகிப்தின் தெற்கு எல்லை வரை நீண்டுள்ளது.

ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீன பிரதேசங்களில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள முன்னாள் இஸ்ரேலிய பாதுகாப்புப் படை வீரர்களின் சாட்சியங்களை சேகரிக்கும் “பிரேக்கிங் தி சைலன்ஸ்“ அமைப்பு கடந்த வாரம் ஒரு அறிக்கையை வெளியிட்டது, அதில் அவர்கள் சூனியப் பிரதேசத்தில் வீடுகள், உள்கட்டமைப்பு மற்றும் விவசாய நிலங்களை முறையாக அழிப்பது என விவரிக்கின்றனர். அந்தப் பகுதிகள் தற்போது பெரும்பாலும் பாலஸ்தீனர்களுக்கு தடைசெய்யப்பட்ட பகுதியாகக் காணப்படுகின்றது என அவர்கள் கூறுகிறார்கள்.

“விவசாய நிலங்கள், கல்லறைகள், கைத்தொழில் பகுதிகள், வீடுகள் என அனைத்தையும் நாங்கள் இடித்தோம். அது எங்களுக்கு அதிக பாதுகாப்பைத் தரும் என இஸ்ரேலிய பாதுகாப்புப் படை கருதுகின்றது. ஏனென்றால் ஹமாஸ் அல்லது இஸ்லாமிய ஜிஹாத் நெருங்கி வருவதை நாம் அவதானிக்க முடியும்,“ என பிரேக்கிங் தி சைலன்ஸ்- இன் முகாமைத்துவப் பணிப்பாளர் நடவ் வெய்மன் தெரிவித்தார்.

தற்போது சூனியப் பிரதேசத்தில் சேர்க்கப்பட்டுள்ள நிலத்தின் பெரும்பகுதி முன்னர் விவசாய நிலமாக இருந்தவையாகும், இதன் காரணமாக நீண்டகால தாக்கமாக காஸா அதன் சொந்த உணவு உற்பத்தியில் சிலவற்றையாவது மீண்டும் உற்பத்தி செய்ய முடியுமா என்ற கேள்வி எழுகின்றது. பிரேக்கிங் தி சைலன்ஸ் நிறுவனத்தின் மதிப்பீடுகளின்படி, சில பகுதிகளில் சூனியப் பிரதேசம் 2.5 கிலோமீட்டர் (1.6 மைல்) வரை அகலமாக உள்ளது, கிழக்கு காஸா நகரத்தில் உள்ள ஷெஜையா போன்ற நகர்ப்புற பகுதிகள் வரை செல்கின்றது..

“எல்லைக்கு அருகிலுள்ள அனைத்து பகுதிகளும் - வடக்கு, தெற்கு மற்றும் கிழக்கு - கைப்பற்றப்பட்டு பீரங்கி குண்டுவீச்சுக்கு உள்ளாகியுள்ளன. காஸா பகுதிக்குள் உள்ள அனைத்து பகுதிகளும் வான்வழி குண்டுவீச்சுக்கு உள்ளாகியுள்ளன. தப்பிக்க வழி இல்லை,“ என 43 வயதான பலஸ்தீன பெண்ணொருவர் மேற்கு காஸா நகரத்திலிருந்து தொலைபேசி மூலம் சர்வதேச ஊடகமொன்றிடம் தெரிவித்தார். அங்கு அவரது குடும்பம் தற்போது உறவினர்களுடன் தங்கியுள்ளது.

“சந்தையில் துப்புரவுப் பொருட்கள் இல்லை, குடிநீர் இல்லை, போதுமான உணவு இல்லை, எரிவாயு இல்லை, மேலும் சுகாதார நிலைமை மோசமாக உள்ளது“ என தனது குடும்பத்திற்கு அதிகரித்து வரும் கடினமான தினசரி போராட்டத்தை விளக்கினார்.

“தற்போதைய காஸா முன்பு இருந்த காஸா அல்ல. எமது குழந்தைகளுக்காகவும் சிறந்த எதிர்காலத்திற்கான நம்பிக்கையுடனும் நாங்கள் உயிர்வாழ முயற்சிக்கிறோம்,“ என அவர் மேலும் தெரிவித்தார்.

# டான் பிரியசாத் கொலை: கண்டுபிடிக்கப்படாத சூத்திரதாரி



எம்.எஸ். அமீர் ஹுசைன்

உயிர்த்த ஞாயிறு தற்கொலை குண்டு தாக்குதல் நடைபெற்று 06 வருடங்கள் பூர்த்தியடைந்துவிட்டன. ஆறு வருடங்களாக பாதிக்கப்பட்ட கிறிஸ்தவ மக்கள் தாக்குதலின் உண்மையான சூத்திரதாரி யார் என்பதை அறிய ஆவலோடு காத்திருக்கின்றனர். அவர்களோடு சேர்ந்து இந்த தாக்குதலால் பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களும் படுகொலையை திட்டமிட்டவர்களையும் அதன் பின்னணி யையும் அறிவதற்கு மிகுந்த ஆவலோடு இருந்து வருகின்றனர். இப்படியாக 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதி கோதாபய ராஜபக்ஷ தாக்குதலின் பின்னணியை கண்டுபிடிப்பதாக மக்களை ஏமாற்றினார். இந்த தற்கொலை தாக்குதலை ஆயுதமாக பயன்படுத்தியே அவர் ஆட்சியை கைப்பற்றினார். சிங்களவாதம், தேசப்பற்று, இஸ்லாமிய பயங்கரவாதம், இஸ்லாமிய அடிப்படைவாதம் ஆகியவற் றை மக்களுக்கு காட்டி நாட்டில் அச்சத்தையும் பீதியையும் ஏற்படுத்தியதோடு இனங்களுக்கிடையிலான குரோத உணர்வை வியாபிக்கச் செய்து பதவிக்கு வந்தார்.

சூத்திரதாரியை கண்டுபிடித்து வெளிப்படுத்துவதை விட்டு விட்டு நடைபெற்றுக் கொண்டிருந்த விசாரணைகளை திசைமாற்றி குழப்பியடித்து மேலும் நெருக்கடியை ஏற்படுத்தினார். அதனால் பேராயர் மெல்கம் ரஞ்சித் உட்பட அவர் சார்ந்த ஒட்டுமொத்த கிறிஸ்தவ சமூகமே ஏமாற்றப்பட்டனர்.

இவ்வாறான ஒரு நிலையில் 2024 ஆம் ஆண்டு தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்கா கிறிஸ்தவ மக்களுக்கும் பேராயருக்கும் புதிய வாக்குறுதிகளை வழங்கினார். அத்துடன் அண்மையில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கா 2025 ஆம் ஆண்டு ஏப்ரில் மாதம் 21 ஆம் திகதி இந்த தற்கொலை தாக்குதல் சம்பவத்தின் சூத்திரதாரியை வெளிப்படுத்துவதாக பகிரங்கமாக அறிவித்திருந்தார். அதனால் மக்கள் மத்தியில் புதிய எதிர்பார்ப்புக்கள் வலுவடைந்திருந்தது. உயிர்த்த ஞாயிறு தினமும் கடந்து 21 ஆம் திகதியும் கடந்த நிலையில் தற்கொலை தாக்குதல் சம்பவத்தின் சூத்திரதாரி யார் என்ற தகவல் ஜனாதிபதியால் வெளிப்படுத்தப்படவில்லை. ஜனாதிபதி வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றுவார் என்று எதிர்பார்த்த மக்களுக்கும் நாட்டிற்கும் பலத்த ஏமாற்றமே கிடைத்தது எனலாம்.

எவ்வாறானாலும் 2025 ஏப்ரில் 04 ஆம் திகதி முன்னாள் பிரதி அமைச்சரும் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சருமாக இருந்த பிள்ளையான் என்றழைக்கப்படும் சிவனேசதுரை சந்திரகாந்தன், மட்டு பல்கலைக்கழக முன்னாள் உபவேந்தர் கொலை வழக்கில் சந்தேக நபராக கைது செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருகின்றார். அவர் இந்த உயிர்த்த ஞாயிறு சூத்திரதாரி தொடர்பாக ஏதாவது தகவல்களை வெளியிடலாம், ஜனாதிபதி அதனை ஆதாரமாக வைத்தே இவ்வாறு சூத்திரதாரியை வெளியிடுவது என்ற தகவலை தெரிவித்தாரோ என்றும் சிந்திக்க தோன்றுகின்றது. ஆனாலும் அரசாங்கம் ஒரு விடயத்தை தெளிவாக சொல்லி இருக்கின்றது. இந்த உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக ஆளமான விசார ணைகளை நடத்தும். விசாரணை செய்யாமல் சூத்திரதாரி யார் என்பதை சொல்ல முடியாது. அதனால் நீதியானதும் நேர்மையானதுமான விசாரணைகளுக்கு உத்தர விடப்பட்டிருக்கின்றது. விசாரணை முடிவில் சூத்திரதாரி வெளிப்படுத்தப்படலாம். அதன் பின்னர் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு தகுந்த தண்டனை வழங்கப்படும் என்று அரசாங்கம் திட்டவட்டமாக தெரிவித்திருக்கின்றது.

அதற்கு ஏற்றவகையில் உயிர்த்த ஞாயிறு விசாரணை ஆணைக்குழு அறிக்கையை அரசாங்கம் பொலிஸ் திணைக்களத்திடம் ஒப்படைத்து அதற்காக ஒரு குழுவையும் நியமித்து விரிவான விசாரணைகளை மேற்கொள்ள உத்தரவிடப் பட்டிருக்கின்றது. அது தொடர்பான குழுவிற்கு பொறுப்பான அதிகாரி தெரிவிக்கையில் இந்த அறிக்கையில் 66000 முதல் 67000 பக்கங்கள் அளவில் உள்ளன. அதில் பல விடயங்கள் வெவ்வேறு பிரிவுகளில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

அதனால் அதற்காக மேலும் பல உப குழுக்களை நியமித்து குறிப்பிட்ட அளவு கால அவகாசம் எடுத்து விசாரணைகளை மேற்கொண்ட பின்னரே இந்த தாக்குதலின் உண்மையான சூத்திரதாரி உட்பட சம்பந்தப்பட்டவர்களை கண்டு பிடிக்கவும் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவும் முடியுமாக இருக்கும் என்று தெரிவித்திருக்கின்றார்.

அதே நேரம் கிறிஸ்தவ சமூகமும் பேராயரும் இந்த விசாரணைகள் ஏற்கனவே நடத்தப்பட்ட போது கவனம் செலுத்தப்படாத விடயங்கள், சாட்சியங்கள், நபர்கள், சந்தர்ப்ப சூழ்நிலைகள் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டு புதிய கோணத்தில் விசாரணைகள் நடத்தப்பட வேண்டும். அத்துடன் அரசாங்கத்தின் பேச்சில் பூரண நம்பிக்கை இருக்கின்றது என்றும் பச்சை கொடி காட்டி இருக்கின்றது. அத்துடன் இந்த சம்பவம் தொடர்பாக மக்கள் வைத்திருந்த எதிர்பார்ப்பை திசை திருப்பும் வகையில் நாட்டிலும் பல சம்பவங்கள் நடந்துள்ளன. முதலில் வத்திகானில் பாப்பரசர் உயிர் நீத்தமை இந்த நாட்டில் கிறிஸ்தவ மக்கள் மத்தியில் ஆழமான கவலையை ஏற்படுத்தி இருக்கின்றது. அதனால் அவதானம் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சூத்திரதாரியை தேடுவதில் அதிகமாக செலுத்தப்படவில்லை. அத்துடன் கண்டி தலதா மாளிகையில் கௌதம புத்தரின் புனித தந்தம் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டிருக்கின்றது. அதனால் அரசாங்கம் அந்த விவகாரத்தில் பிசி ஆகி இருக்கின்றது.

அத்துடன் நாட்டில் அதிகமானவர்களது அவதானத்தை ஈர்த்ததாக இருந்த சிங்கள பௌத்தவாத மற்றும் முஸ்லிம் விரோத செயற்பாட்டாளரும் பல இன வன்முறை செயற்பாடுகளுக்கு சூத்திரதாரியாகவும் கொலன்னாவை மாநகர சபையின் உள்ளூராட்சி சபையின் பொதுஜன பெரமுன கட்சியின் வேட்பாளருமான டான் பிரியசாத் 2025.04.22 ஆம் திகதி இரவு சுட்டுக் கொல்லப்பட்டார். இவ்வாறான சம்பவங்கள் நாட்டில் ஒருவகையில் மக்களது அவதானங்களை திசை மாற்றிக் கொண்டிருக்கின்றது. எவ்வாறாயினும் உயிர்த்த ஞாயிறு தாக்குதலால் உயிரிழந்தவர்களது நினைவேந்தல் நாட்டில் பல பாகங்களில் உள்ள தேவாலயங்களில் நடைபெற்றுள்ளன. அதில் மட்டக்களப்பில் சியோன் தேவாலயத்தில் இடம்பெற்ற நினைவேந்தல் நிகழ்வில் அகில இலங்கை கிறிஸ்தவ காங்கிரஸ் அமைப்பின் தலைவர் சிவதர்சன் ஊடகங்களுக்கு தெரிவித்த கருத்தில் சொல்லியிருந்த ஒரு சில விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டி இருக்கின்றது.

அவர் அங்கு தெரிவிக்கையில் சஹ்ரானின் பயங்கரவாதத்தின் மறுவடிவம் அல்லது மறு தோற்றம் கிழக்கில் சுபர் முஸ்லிம் அமைப்பு என்றும் முன்னாள் கிழக்கு மாகாண ஆளுனரும் அமைச்சருமாக இருந்த தற்போதைய பாராளுமன்ற உறுப்பினர் ஹிஸ்புல்லாஹ் கிழக்கு பிரதேசம் முஸ்லிம்களின் தாயகம் என்று கூறுகின்றார் அதனால் கிழக்கில் மதரீதியான பாகிஸ்தான் போன்ற ஒரு தாயகத்தை உருவாக்க முயற்சிக்கின்றார் என்ற அடிப்படையில் சில கருத்துக்களை வெளியிட்டுள்ளார். இவ்வாறான கருத்துக்கள் தொடர்பாக உரிய விடயங்களோடு சம்பந்தப்பட்டவர்கள் சிந்திக்க வேண்டி இருக்கின்றது. குறிப்பாக ஹிஸ்புல்லாஹ் கிழக்கில் தனியான தாயகம் பற்றி பேசி இருப்பாரானால் அது பற்றிய ஒரு தெளிவை மக்களுக்கு சரியான முறையில் வழங்க வேண்டும். அதற்காக கலந்துரையாடல்களை நடாத்தலாம்.

அதே நேரம் கிழக்கு மாகாணத்தில் இதுவரையில் யாரும் அந்த மாகாணத்தை பாகிஸ்தான் போன்று தனிநாடாக பிரித்து ஆட்சி செய்வது தொடர்பாக எந்தவிதமான கருத்துக்களையும் முன்வைத்ததில்லை. ஆனால் அப்பிரதேச முஸ்லிம்களின் அரசியல், பொருளாதார உரிமைகள், தேவைப்பாடுகள் தொடர்பாக அரசியல் மேடைகளில் பேசி வந்திருக்கலாம். அதற்காக குரல் கொடுக்கும் முஸ்லிம் தரப்பு பிரதிநிதிகளில் ஹிஸ்புல்லாஹ் முக்கியமானவராக இருக்கலாம். அவ்வாறே கிழக்கில் கல்முனை பிரதேசத்தில் அண்மையில் அறிமுகமாகிய சுபர் முஸ்லிம் என்ற பெயரிலான அமைப்பு எந்தவிதமான இஸ்லாமிய பயங்கரவாத செயற்பாடுகளோடும் சம்பந்தப்பட்ட அமைப்பு அல்ல என்பதை அப்பகுதி பொலிஸாரும் புலனாய்வு அதிகாரிகளும் கண்டறிந்துள்ளனர் என்ற தகவல்கள் வெளியாகி உள்ளன.

இந்த அமைப்பானது அப்பிரதேசத்தில் வசிக்கும் ஒரு உளவளத்துறை ஆலோசகரால் ஏற்படுத்தப்பட்டதும் இஸ்லாமிய செயற்பாடுகளில் இருந்து சற்று மாற்றமான மிதவாத போக்கை கொண்ட விளக்கங்களை முன்வைத்து சுமார் 60 சீடர்களுடன் செயற்படும் ஒரு அமைப்பு ஆகும். இந்த அமைப்பு தொடர்பாக அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபை உட்பட அப்பிரதேச முஸ்லிம்களும் அவர்களது கண்டனங்களை வெளியிட்டிருக்கின்றனர். அத்துடன் இந்த அமைப்பு ஒரு பயங்கரவாத அல்லது அடிப்படைவாத அமைப்பாக இருந்தால் தற்போது குறித்த ஒரு இடத்தை தளமாக கொண்டு இயங்கும் இந்த அமைப்பை ஆழமான விசாரணைக்கு உட்படுத்தி அதன் நடவடிக்கைகளை முற்றுப்பெறச் செய்வது அல்லது சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்த வேண்டியது பாதுகாப்பு துறையின் பொறுப்பாகும். இது குறித்து ஏற்கனவே உள்நாட்டு பாதுகாப்பு அமைச்சர் விளக்கங்களை முன்வைத்திருந்தார்.

அதனால் பொறுப்புவாய்ந்த சமூகத்தலைவர் என்ற வகையில் தகவல்களை சரியான முறையில் பெற்று தீர அறிந்து போதுமான விளக்கத்தை பெறாமல் இதுபோன்ற பொதுமக்கள் ஒன்று கூடும் மேடைகளை பயன்படுத்தி கருத்துக்களை வெளிப்படுத்தி மக்கள் மத்தியில் அச்சம், பீதி, வீணான சந்தேகங்கள், குழப்ப நிலைகளை தோற்றுவிப்பதை தவிர்க்க வேண்டும். இவ்வாறான விடயங்கள் தொடர்பாக மக்கள் மத்தியில் அச்சம், பீதி வீண் சந்தேகங்கள் ஏற்படும் போது அவர்கள் சம்பந்தப்பட்ட இனத்தவர்களை சந்தேகக் கண்கொண்டு பார்க்கின்றனர். அத்தகைய நிலைமைகள் இனரீதியான வன்முறைகளுக்கும் முரண்பாடுகளுக்கும் வழிவகுக்க காரணமாக அமைகின்றது என்பதையும் மறந்துவிட முடியாது.

ஏற்கனவே உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்தின் பின்னர் பலமுறை பேராயர் மெல்கம் ரஞ்சித் அவர்களும் இவ்வாறான விடயங்கள் தொடர்பாக பொது வெளியில் சமூகத்தலைவர்கள் எவ்வாறு கருத்துக்களை வெளியிட வேண்டும், ஆத்திரத்தில் மோசமான கருத்துக்களை கொட்டித்தீர்த்து பொதுமக்கள் அபிப்பிராயங்களை கட்டியெழுப்ப வேண்டாம் என்று அவரது ஆராதனைகளில் கேட்டுக் கொண்டிருக் கின்றார்.

அத்துடன் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவங்களால் கிறிஸ்தவர்கள் பாதிக்கப்பட்டது போன்று முஸ்லிம்களும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். தகுந்த காரணம் இன்றியும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படாமலும் கடந்த 06 வருடங்களாக தடுத்து வைக்கப்பட்டவர்கள் பலர் உள்ளனர். ஏற்கனவே கைது செய்யப்பட்டு விசாரணைகள் செய்யப்பட்ட அவர்கள் எந்தவிதத்திலும் சம்பந்தம் இல்லை என்ற அடிப்படையில் விசாரணைகளின் முடிவில் விடுதலை செய்யப்பட்டவர்களும் சமூக நீரோட்டத்திற்குள் நுழைய முடியாமல் பாதிக்கப்பட்டுள்ளனர். அதே போன்று அத்தகைய குடும்பங்களுக்கும் தொடர்ச்சியாக பல பிரச்சினைகள் உள்ளன.

அதனால் இந்த குண்டு தாக்குதல் கோதாபய கால அரசியலை நிர்ணயிப்பதற்கான திட்டமிடப்பட்ட தாக்குதல் என்றும் சஹ்ரான் கும்பலை நிதிவழங்கி போசித்து வளர்த்த அரசியல்வாதிகள் இவர்களே என்பது நாட்டிற்கு நன்றாக தெரிந்திருந்தாலும் இன்னும் சூத்திரதாரியை தேடுவதில் காலம் கடத்தப்படுகின்றது. இரு தினங்களுக்கு முன்னர் படுகொலை செய்யப்பட்ட டான் நாட்டில் எத்தனையோ இஸ்லாமிய விரோத செயற்பாடுகளுக்கும் வன்முறைகளுக்கும் காரணமானவராவார். அவர் யாரால் பணம் கொடுத்து செயலில் இறக்கப் பட்டவர் என்பதை சொல்லித் தெரிய வேண்டியதில்லை. அவர் மஹிந்த ராஜபக்ஷ முகாமுக்குள் இருந்துகொண்டே அவர்களது அரசியல் நலனுக்காக கடந்த 10 வருடங்களுக்கு மேலாக இத்தகைய செயல்களை புரிந்து வந்தார்.



அதனால் தற்போது உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் காலமாக இருப்பதால் அரசியல் மேடைகளில் மீண்டும் இனவன்முறைகளுக்கான வழிகாட்டல்கள், குரோதங்களை ஏற்படுத்தும் விதமான கருத்துக்களை பரப்புதல், வெறுப்பூட்டும் பேச்சுக்கள் என்பன சர்வசாதாரணமாக வெளிப்படுத்தப்பட்ட வண்ணம் இருக்கி ன்றன. அதனால் நாட்டில் சட்டம், ஒழுங்கு, சமாதானம், சகவாழ்வு என்பன மிகவும் முக்கியமானதாக இருக்கின்றன. சில சந்தர்ப்பங்களில் சஹ்ரான் போன்ற அமைப்புக்கள் உருவாகி இந்தளவுக்கு பேரழிவுகளை ஏற்படுத்த பின்னணியில் இருந்தவர்கள் இத்தகைய அரசியல் , மத பின்னணிகளைக் கொண்ட தலைவர்களாவர். அதே போன்று சுட்டுக்கொல்லப்பட்ட டான் பியசாத், கலபொட அத்தே ஞானசார தேரோர், உட்பட பல இனவாதிகளும் உள்ளனர். ஆனால் இன்று அவர்கள் நல்லவர்களாகவும் சமூக நீதிக்காக குரல் எழுப்பும் தேசிய வீரர்களாகவும் பேசப்படக்கூடியவர்களாக மாறி இருக்கின்றனர். அதனால் மக்கள் பகுத்தறிவுடன் செயற்பட வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றனர்.

# சௌபாக்கியம் நிறைந்த பகுதியாக பேருவளையை மாற்றுவதே சுயேட்சை அணியின் இலக்கு

## வேட்பாளர் இஷாக் மர்ஜான் பளீல்!



(பேருவளை பி.எம் முக்தார்)

பேருவளை நகர சபை பகுதியை அபிவிருத்தி செய்து மக்களுக்கு சௌபாக்கியம் நிறைந்த பிரதேசமாக மாற்றுவது சுயேற்சை அணியின் பிரதான இலக்காகும் என பேருவளை நகர சபை தேர்தலில் சுயேற்சை அணி சார்பில் சீனன் கோட்டை வட்டாரத்தில் போட்டியிடும் இஷாக் மர்ஜான் பளீல் தெரிவித்தார்.

சீனன் கோட்டையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்ற ஊடாக சந்திப்பொன்றில் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்து பிரச்சனைகளுக்கு தீர்வு பெற்று கொடுப்பதே எமது பிரதான நோக்காகும்.

புதிய தொழில்நுட்பத்தின்னுடாக மக்களின் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வினைப் பெற்றுக்கொடுத்து மக்களின் வாழ்க்கைத் தரத்தைய மேம்படுத்தி தென்னிலங்கையில் அபிவிருத்தியடைந்த அழகான, தூய்மையான நகரமாக பேருவளையை நாம் மாற்றி அமைப்போம். இதற்கான சந்தர்ப்பத்தினை எங்களுக்கு மக்கள் வழங்க வேண்டும் அதன் மூலம் மக்களுக்கு சௌபாக்கியம் நிறைந்த பிரதேசமாக நாம் பேருவளையை மாற்றியமைப்போம்.

உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது கல்வி, சுகாதார, விளையாட்டுத்துறை, கைத்தொழில் மீன்பிடி உல்லாசப் பயணத்துறை, இரத்தினக்கல் வர்த்தகத்துறையை கட்டியெழுப்ப என்னிடம் பாரிய வேலை திட்டங்கள் உள்ளன.

இவற்றை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த சுயேற்சை அணியை வெற்றி பெறச் செய்யுங்கள். மோட்டார் சைக்கிள் சின்னத்தை தெரிவு செய்து சிறப்பான சேவைகளை பெற்றுக் கொள்ளுங்கள் என்று அவர் கூறினார்.

# பேருவளை நகர சபை தேர்தலில் போட்டியிடும் சியாஸ்தீன் ஹாஜி

(பேருவளை பீ.எம்.முக்தார்)

பேருவளை மஹககொடை அஹதிய்யா பாடசாலையின் தலைவரும் பிரபல சமூக சேவையாளருமான அல்-ஹாஜ் ஏ.ஐ.எம்.சியாஸ்தீன் பேருவளை நகர சபை தேர்தலில் சுயேற்சை குழு மோட்டார் சைக்கிள் சின்னம்) சார்பில் பட்டியலில் போட்டியிடுகிறார்.

அகில இலங்கை சமாதான நீதிவானான இவர் களுத்துறை மாவட்ட ஜனாஸா சேவை சங்கத்தின் உறுப்பினராகவும் பதவி வகிக்கிறார்.

சமூக சேவைக்காக தன்னை அர்ப்பணித்துள்ள இவர் களுத்துறை மாவட்ட ஜனாஸா சேவை சங்க முன்னாள் செயலாளர் மர்ஹூம் இமாம்தீன் ஹாஜியாரின் புதல்வராவார்.

அஹதிய்யா பாடசாலையினூடாக மஹககொடை பகுதியில் பல கல்வி, சமய,சமூக பணிகளில் ஈடுபட்டுள்ள இவர் அஸாம் பலீல் தலைமையிலான சுயேற்சை அணியில் மோட்டார் சைக்கிள் சின்னத்தில் பேருவளை நகர சபைக்கு பட்டியல் வேட்பாளராக களமிறங்கியுள்ளார்.

இது குறித்து ஏ.ஐ.எம். ரியாஸ்தீன் கூறியதாவது நடைபெறவுள்ள நகர சபை தேர்தலில் பேருவளை நகர சபையை சுயேற்சை நிச்சயம் கைப்பற்றும்.

முன்னாள் சுகாதாரஅமைச்சர் ராஜித ஸேனாரத்ன மற்றும் எம்.பி.மர்ஜான் பளீல் அவர்களின் வழிகாட்டல்கலுடன் சிறந்ததொரு வேட்பாளர் குழு இம்முறை நகர சபை தேர்தலில் சுயேற்சை அணி சார்பாக போட்டியிடுகிறது.

சுயேற்சை அணியின் வெற்றிக்காக இன்று முழு பேருவளை வாழ் மக்களும் ஒரு குடையின் கீழ் ஒன்றுபட்டுள்ளனர்.நகர சபையூடாக மக்களுக்கு சிறந்த பல சேவைகளை நாம் எதிர் காலத்தில் முன்னெடுப்போம் என்றார்.







# வாசிப்பும் மொழி விருத்தியும்

பற்றும் ஈடுபாடும் அலுப்பும் சலிப்பும் தட்டாத வாசிப்பனுபவத்தைத்தரும்.

மிகவும் கடினமான நடையிலுள்ள புத்தகமானாலும் வாசகனின் மொழித் தேர்ச்சி வாசிப்பை இலகுவானதாகவும் இயல்பான தாகவும் மாற்றும். மூல மொழியில் உள்ள நாவல் ஒன்று இன்னொரு மொழிக்கு பரிவர்த்தனை வழியாக குறித்த பிரதி எண்ணற்ற வாசகர்களை சென்றடைய முடியும். இதுவும் வாசிப்பு மொழி வழியாக விருத்தியடைகின்ற ஒழுங்குதான்.

உலக கலாச்சாரங்கள் நாகரீகங்கள் இலக்கியங்கள் போன்றன மொழிவழியாகவே ஒன்று மற்றொன்றை அறிமுகமாகிக்கொள்கின்றன.

ஒரு மொழி மட்டும் தெரிந்த மொழிக்கு மொழி பெயர்க்கின்ற பொழுது அது இரட்டிப்பு நன்மையைத் தருகின்றது. இரு மொழி வாசகர்களுக்கு இடையிலான உறவை பலப்படுத்துகிறது.

இப்படி கூர்ந்து அவதானிக்கின்ற பொழுது மொழியை வாசிப்போம் வாசிப்பை மொழியும் பலப்படுத்தி விடுகிறது வாசகனை வசீகரித்து விடுகிறது.

வாசிப்புக்கும் மொழிக்கும் கட்டிருக்கமான தொடர்புள்ளது. வாசிப்பின் விருத்தி என்பது மொழியின் விருத்தியாகும். மொழியின் விருத்தி என்பது வாசிப்பின் விருத்தியாகும்.

வாசிப்பு தருகின்ற மிகப் பிரதான பயன்களுள் ஒன்றுதான் வாசிக்கப்படும் மொழியை வாசகனிடம் விருத்தி செய்யும் பண்பு.

குறிப்பிட்ட ஒரு மொழியில் எந்தளவு தூரம் ஆழ அகலமாக பன்முகப்பட்ட அளவில் வாசிக்கின்றோமோ அந்த அளவு அந்த மொழியின் ஆழத்தையும் வீச்செல்லையையும் எட்டிப் பார்க்கவும் தொட்டுப் பார்க்கவும் முடியும்.

குறிப்பிட்ட மொழியில் ஏனைய துறை சார்ந்த கலைச் சொற்கள் எப்படி எப்படி எல்லாம் கையாளப்பட்டிருக்கின்றதோ அவை குறித்த தெளிவை, அறிவைப் பெற்றுக்கொள்ள முடியும்.

வாசிப்பின் அர்த்தாழமும் சுவையும் மொழி வழியாகவே தீர்மானிக்கப்படும். மொழி மீதான செய்யப்படுகின்ற பொழுது இரண்டா இலக்கியங்கள் ஒன்றோடொன்று சங்கமிப்பதைக் காணலாம்.

பல போது மூல மொழியை விட மொழிபெயர்க்கப்படும் மொழி வாசகனை விட இருமொழி தெரிந்த வாசகன் உயர்ந்து நிற்கின்றான்.

ஒரு மொழியில் உள்ள இலக்கியம் சார் பிரதி ஒன்றை வாசித்து முடிப்பதை விடவும் இன்னொரு மொழியால் வாசிப்பு வாழ்கிறதே வாசிப்பாள் மொழியும் வாழ்கிறது. இந்த இரண்டையும் ஒரே நேரத்தில் செய்கின்ற வாசகன் போற்றத்தக்கவன்.

## மனநலமும் ஆலோசனையும் 77

# பெண்ணின் பாத்திரங்கள்

ஆணும் சரி, பெண்ணும் சரி வாழ்க்கை பாதையில் பல பாத்திரங்களை ஏற்று வாழ்கின்றனர். இருவர் சுமக்கும் பாத்திரங்களும் இரண்டு வழிகளில் பயனுடையவை. அதில் ஒரு பெண் சுமக்கும் பாத்திரங்கள் பற்றி மேலோட்டமாக பார்ப்போம். மகள், மனைவி, மருமகள், மாமி, உம்மா, உம்மம்மா இப்படி அவள் வாழ்க்கையில் பல பாத்திரங்களை ஏற்கிறாள். இந்த ஒவ்வொரு பாத்திரமும் வித்தியாசமான அனுபவங்களை கொண்டதாக இருக்கும். அங்கு பல விடயங்களை சேர்க்க வேண்டியிருக்கும். பல விடயங்களை விட்டுவிட வேண்டியும் இருக்கும். காலமும் வயதும் அவளை பல தியாகங்களுடனும் பல விட்டுக் கொடுப்புகளுடனும் அழைத்துச் செல்லும். ஒரு பெண்ணின் வாழ்க்கை பயணம் அப்படித்தான் இருக்கும். இருக்கவும் வேண்டும். ஒரு பெண் ஏற்கும் பாத்திரங்களில் எத்தனையோ காட்சிகள் இருக்கும். அதில் எழுந்து நிற்க முடியாத வீழ்ச்சிகளும் இருக்கும். சந்தோசங்களும் இருக்கும். அவற்றை அனுபவித்து, சவால்களை முறையாக சந்தித்து பயணிக்கும் போது தான் அவள் வாழ்க்கை ஏற்றம் தரும். அமைதியும், அழகும், அர்த்தமும் தரும்.

வித்தியாசமான அனுபவங்களை சந்தித்து புதிய பரிணாமம் கண்டு வாழ்வுக்கு அர்த்தம் கொடுத்து படிப்பினைகள் பல தந்த ஒரு பெண்ணின் பாத்திரங்களில் சில துளிகளை படிப்பினைக்காக இங்கு உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

அவள் ஒரு ஆசிரியயை. கணவரும் ஒரு ஆசிரியர். பணிப் பொறுப்பில் இருவரும் உறுதியானவர்கள். அமைதி, நிதானம், அர்ப்பணம் கொண்ட கணவன். இருவரும் ஒன்றாக தொழிலுக்கு போய்க் கொண்டிருந்த அழகான காலம் அது. அவள் மனைவியாக ஏற்ற பாத்திரமும் தாயாக ஏற்ற பாத்திரமும் அழகாகவே மலர்ந்து கொண்டிருந்தது. பிள்ளைகள் ஆறு பேருக்கு சொந்தக்காரியானாள். மூவர் பெண் பிள்ளைகள். எல்லோரும் பள்ளிப் பிள்ளைகளாக இருக்கும் போதே திடீரென கணவன் நோய்வாய்ப்படுகிறான். ஒரு ஆலமரம் சாய்ந்தது போன்ற உணர்வு அவளுக்கு. நடக்கவோ, பேசவோ முடியாத நிலையை கணவன் அடைந்து விடுகிறான். கணவனை பார்க்கும் பொறுப்பு, பிள்ளைகளை பராமரிக்கும் பொறுப்பு, தொழிலை எப்படி தொடர்வது என்ற ஏக்கம் எல்லாமே ஒன்று சேர்ந்து அவளை ஒரு கனம் உசுப்பி விடுகிறது.

எழ முடியாத ஒரு வீழ்ச்சியை கண்டது போன்ற உணர்வு அவளுக்கு. என்ன செய்வது. ஆம்! அவள் விட்டுவிடவில்லை. கணவரை இழக்க விரும்பவும் இல்லை. இறைவா..! என் கணவரை காப்பாற்றித் தா, கடைசிவரை அவரை பார்க்கும் வரத்தையும் தந்துவிடு என்று வைத்தியசாலையில் இருந்து கொண்டே இறைவனை வேண்டினால்.

அவள் உடலும் உள்ளமும் ஏதோவொரு சோகத்தை அனுபவித்தாலும் அந்த சோகத்தில் வாழ மனதுக்கு இடம் தராமல், மலையில் நனைந்த சிங்கம் உடம்பை அசைத்து நீர்த் துளிகளை அகற்றிவிட்டு கம்பீரமாக எழுந்து போவது போல் அவளும் தன் கவலைகளை, ஏக்கங்களை அகற்றிவிட்டு ஏழாவது பிள்ளையாக கணவரையும் சேர்த்து தன் இலட்சியப் பயணத்தை ஆரம்பித்தாள். சுமார் இருபத்தி இரண்டு வருடங்கள் ஒரு கைப்பிள்ளையை கவனிப்பது போன்று தன் கணவரையும் கவனித்தாள். ஆகக் கூடினால் வெறும் இரண்டு மூன்று வருடங்கள் தான் ஒரு குழந்தையின் மலசலத்தை ஒரு தாய் துப்பரவு செய்வாள். ஆனால் இங்கு இருபத்தி இரண்டு வருடங்கள் தன் கணவரின் மலசலத்தை துப்பரவு செய்து, உணவு ஊட்டி, குளிப்பாட்டி கவனிப்பது என்பது எவ்வளவு கடினமான விடயம். அதுவும் ஒரு ஆசிரியராக இருந்து செய்வது என்பது மிகவும் கடினமானது.

ஆனால் அவளுக்கு அது பாரமாக தெரியவில்லை. வெறுப்புடன் செய்யவும் இல்லை. பார்வை மங்கி வயதுக்குப் போன தன் மாமியின் உதவியுடன் பிள்ளைகளையும் பராமரித்து தொழிலையும் செய்து கணவரையும் காத்து ஓய்வில்லாமல் ஓடினால். அந்த ஓட்டத்தில் ஆயிரம் தடைகள் இருந்தபோதிலும் அதில் அமைதி கண்டாள். எதிர்பாராத விதமாக அவளும் ஒரு நோயால் பாதிக்கப்பட்டாள். தளராத மனம் படைத்த அவள் அங்கும் அசந்து போகவில்லை. தன் தொழிலுக்கு பிரியாவிடை கொடுத்துட்டு கணவரையும் பிள்ளைகளையும் பார்க்கும் முழுநேர பொறுப்பை ஏற்றாள்.

தன் பிள்ளைகளை பண்பாடு கெட்டுப் போகாமல் உயர் தரம் வரை கற்பித்தாள். பொருத்தமானவர்களை தேடி மணம் முடித்து வைத்தாள். இருபத்தொரு பேரப் பிள்ளைகளை கண்டு மகிழ்ந்தாள். கணவர் பொறுப்பையும் தன் தலையில் சுமந்து தனிமரமாய் தளிர் விட்டாள். சொல்லிக் கொள்ள முடியாத எத்தனையோ சவால்களை சரியாக வெற்றி கொண்டாள். வெளியே சொல்லாத ஆயிரம் அனுபவங்கள் அவளுக்குள் இருந்திருக்கும். ஆயிரம் நோவுகள் சிறைபட்டிருக்கும். ஒருவர் ஏற்ற பாத்திரங்களின் பொறுப்பை பொறுப்பாக நிறைவேற்றும் போது வேதனைகளின் நோவுகள் புரிவதில்லை. அவளுக்கும் அப்படியே இருந்திருக்கும்.

அவள் பிள்ளைகள் எல்லோரும் திருமணமாகிய பிறகு, கணவர் காலம் சென்று காலங்கள் பல கடந்த பிறகு, ஒருவருக்கு ஒரு புத்திமதி சொல்லும் சந்தர்ப்பத்தில் அவளை அறியாமலே ஒரு சின்ன அனுபவம் வார்த்தைகளாக வெளிவந்தது. "நான் என் கணவர் நோயுற்ற காலம் தொடக்கம் என்னைவிட்டு பிரியும் வரை என் கைகளில் மலத்தின் நாற்றத்தை உணராத நாட்கள் இருக்கவில்லை." என்று சொன்னதை அறிந்த நான் அதிர்ந்து போனேன். நீண்ட காலம் கட்டிலோடு இருக்கும் நோயாளிகளுக்கு மலச்சிக்கல் வருவது சாதாரணமானது. அதை சுத்தம் செய்து வெளியேற்றுவது இலகுவான செயலல்ல. அதற்கெல்லாம் மற்றவரின் அருவருப்பற்ற அர்ப்பணம் தேவை. அழகான மனம் தேவை.

இந்த அர்ப்பணங்களை ஆசையோடு செய்தது வேறு யாரும் இல்லை. எனது மாமி. மனைவியின் தாய். மதிப்பிற்குரிய என் மாமியார் போன்று அர்ப்பணிப்புகள் பல செய்து மனம் தளராமல் தைரியமாக வாழும் பெண்கள் எம் சமூகத்தில் தாராளமாக இருக்கிறார்கள். அவர்கள் எல்லோருக்கும் அல்லாஹ் அருள் நிறைந்த வாழ்வை வழங்க வேண்டும்.

தற்கால இளம் யுவதிகளுக்கு ஒரு சிறிய விடயத்தை உங்கள் மேலான சிந்தனைக்கு கொண்டு வர முயற்சிக்கிறேன். நீங்கள் உங்கள் குடும்பத்தில் நல்ல படித்தவராக இருக்கலாம். பட்டங்கள் பல பெற்றவராக இருக்கலாம். புதிய திறன்கள் பலவற்றை வளர்த்துக் கொண்டவராக இருக்கலாம். பெற்றோர்களும் வயதுக்குப் போன உறவுகளும் அறியாதவற்றை எல்லாம் அறிந்து வைத்தவராக இருக்கலாம். இருந்தாலும் பாடசாலையும் பல்கலைக்கழகமும் புதிய தொழில்நுட்பங்களும் கற்றுத் தராத பல பாடங்களை உங்கள் உம்மாவிடம் இருந்தும் மாமியிடம் இருந்தும் வயதுக்குப்போன உறுவுகளிடம் இருந்தும் கற்றுக் கொள்ளலாம். அவர்கள் பல அனுபவப் புத்தகங்களை கொண்ட வாசிகசாலை போன்றவர்கள்.

நீங்கள் சுமக்கும் அல்லது சுமக்கப் போகும் ஒவ்வொரு பாத்திரத்திற்கும் தேவையான அறிவு, அனுபவங்களை அவர்களின வாழ்க்கை புத்தகத்தில் இருந்து கற்றுக் கொள்ள முடியும். உங்கள் வயதான உறவுகள் எவரோ அவர் உங்களுடன் இருந்தால் நீங்கள் ஒருவகையில் பாக்கியசாலி. அவர்களிடம் இருந்து வரும் குறைகளை முறையாக சமாளிப்போம். நல்ல அனுபவங்களை கேட்டுத் தெரிந்து கொள்வோம்.

ஒரு ஆனால் ஒருபோதும் செய்ய முடியாது பல சாதனைகளை ஒரு பெண் செய்கிறாள். அவளிடம் இயல்பாக இருக்கும் பொறுமையும் சகிப்புத்தன்மையும் அர்ப்பணிப்பும் ஒரு அழகான சமூக உருவாக்கத்தின் அடிப்படைகள். பெண்களின் தியாக உணர்வுகளின் அவசியத்தை பெண்கள் புரிந்து கொள்வதுடன் அவர்களின் உறவுகளும் அதை உணர்ந்து அவர்களுக்கு ஊக்கம் உற்சாகம் கொடுத்து இந்த மண்ணில் அர்ப்பணிப்புடன் வாழ்வதற்கான இடத்தை கொடுக்கும் நல்லவர்களாக நாங்கள் ஆகுவோம். 21.04.2025 அன்று காலம் சென்ற என் மாமியாருக்கு அல்லாஹ் சுவனத்தில் உயர்ந்த இடத்தை கொடுக்க வேண்டும். இதை வாசிக்கும் ஒவ்வொருவருக்கும் அல்லாஹ் அருள் புரிய வேண்டும் என்றும் பிரார்த்தனை செய்கிறேன்.



அஸ்ஹர் அன்ஸார் FRSPH (UK)
மனோதத்துவ ஆலோசனை நிபுணர்
மனோதத்துவ எழுத்தாளர்

---

# அல்லாஹ்வை – “அவன்” என்பதன் விளக்கம்

இஸ்லாமிய மார்க்க அறிஞரிடம் தெளிவுக்காக ஒரு நபரினால் வினவப்பட்ட வினாவான:

அல்லாஹ்வை “அவன்” என்று கூறுவது சரி முஹம்மது நபியை “அவர்கள்” என்று கூறுவது சரி என்கிறார்களா? அல்லது அல்லாஹ்வை “அவன்” என்று கூறுவது பிழை என்கிறார்களா?

இந்த வினாவுக்கான தெளிவை வழங்கியுள்ள அறிஞர்களான - அபூமுஜாஹிதீன், அஜ்மான், A.V.,. ஆகியோரின் விளக்கத்திலிருந்து:

தொகுப்பு: அபூ அப்துல்லாஹ்

**கேள்வி:**

அவன் என்ற சொல் நடைமுறையில் மரியாதைக் குறைவான வார்த்தையாகக் கருதப்படுகிற போது, முஸ்லிம்களாகிய நீங்கள் இறைவனை அவன் என்று குறிப்பிடுவது ஏன்? இவ்வாறு முஸ்லிமல்லாத நண்பர்கள் கேட்கும் நியாயமான கேள்விக்கு என்ன பதில்?

**பதில்:**

இது மார்க்கம் சம்பந்தப்பட்ட பிரச்சனை இல்லை. மொழி, வரலாறு, பழக்க வழக்கம் சம்பந்தப்பட்ட பிரச்சனையாகும்.

இது தமிழ்மொழி போன்ற சில மொழிகளுக்கு மட்டும் ஏற்படும் பிரச்சனை என்பது முதல் அறிந்து கொள்ள வேண்டிய விஷயமாகும்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தாய்மொழியான அரபு மொழியில் இத்தகைய நிலை ஏற்படாது.

அவன் என்று ஒருவனைக் குறிப்பதற்கு அரபு மொழியில் ஹூவ என்ற வார்த்தையைப் பயன்படுத்துவார்கள். பலரைக் குறிப்பதற்கு ஹூம் என்ற வார்த்தையைப் பயன்படுத்துவார்கள் ஒருவனைக் குறிக்கும் போது மரியாதைக்காக ஹூம் (அவர்கள்) என்று கூறவே மாட்டார்கள்.

அல்லாஹ் தன்னைப் பற்றிக் குறிப்பிடும் போது ஹூவ (அவன்) என்று தான் குர்ஆனில் பயன்படுத்தியுள்ளான். தன்னைப் பற்றிக் குறிப்பிடும் போது ஹூம் (அவர்கள்) என்று அல்லாஹ் பயன்படுத்தவில்லை.

அது போலவே தீயவர்களான இப்லீஸ், ஃபிர்அவ்ன் போன்றவர்களுக்கும் ஹூவ (அவன்) என்று தான் இறைவன் பயன்படுத்தியுள்ளான்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றிக் குறிப்பிடுவதாக இருந்தாலும் ஹூவ என்று தான் கூற வேண்டும். மரியாதைக்காக ஒருமையைப் பன்மையாக மாற்றுவது அரபு மொழியில் கிடையாது.

ஹூவ (அவன்) என்று குறிப்பிடும் போது பலரைப் பற்றிக் கூறப்படவில்லை. ஒரு நபரைப் பற்றி மட்டும் தான் கூறப்படுகிறது என்று தான் அரபுகள் விளங்குவார்களே தவிர, அவர் மரியாதைக்குரியவரா அல்லவா என்பதை இவ்வார்த்தையிலிருந்து புரிந்து கொள்ள மாட்டார்கள்.

இதே போல் ஒருவரைக் குறிப்பிடுவதற்கு ஆங்கிலத்தில் உநு என்ற வார்த்தை பயன்படுத்தப்படுகின்றது. பலரைக் குறிப்பிடுவதற்கு வுஉநுலு என்ற வார்த்தை பயன்படுத்தப்படுகின்றது.

ஒருவரைப் பற்றி குறிப்பிடும் போது மரியாதைக்காக THEY என்று ஆங்கிலத்தில் குறிப்பிடுவதில்லை.

இன்னும் ஏராளமான மொழிகளிலும் இந்த நிலை தான் உள்ளது.

தமிழ் மொழியிலும் ஆரம்ப காலத்தில் இந்த நிலை தான் இருந்தது. அவன் என்பது ஒருவரைக் குறிக்கும். அவர் என்பது பலரைக் குறிக்கும். இது தான் தமிழ் இலக்கண விதி. நடைமுறையும் ஆரம்பத்தில் இப்படித் தான் இருந்தது.

ஒரு நபரைக் குறிப்பிடும் போது, பலரைக் குறிப்பிடுவதற்குரிய சொல்லை (அவர் என்ற பன்மைச் சொல்லை) மரியாதைக்காகப் பயன்படுத்துவது பிற்காலத்தில் வழக்கத்துக்கு வந்தது. அதுவும் போதாதென்று பன்மையை மீண்டும் பன்மையாக்கி அவர்கள் என்று பயன்படுத்துவதும் வழக்கத்திற்கு வந்தது.

மரியாதை கொடுக்காத போது அவன் எனவும்,

மரியாதை கொடுக்கப்பட வேண்டியவரை குறிப்பிடும் போது அவர் எனவும்,

அதிகம் மரியாதை கொடுக்கப்பட வேண்டியவரை அவர்கள் எனவும் பிற்காலத்தில் மாற்றி விட்டனர்.

மரியாதைப் பன்மை தமிழில் வழக்கத்திற்கு வருவதற்கு முன் வாழ்ந்தவர்கள் எவ்வளவு மரியாதைக்குரியவர்களாக இருந்தாலும் அவன் என்றே குறிப்பிடப்பட்டனர். இன்றும் கூட அவ்வாறே குறிப்பிடப்படுகின்றனர்.

வள்ளுவன் சொன்னான், கம்பன் கூறுகிறான், ராமன் வில்லை உடைத்தான் என்றெல்லாம் இன்றும் கூட குறிப்பிடப்படுவதைக் காணலாம்.

அது போலவே மரியாதைப் பன்மை தமிழில் வழக்கத்திற்கு வருவதற்கு முன், கடவுளைப் படர்க்கையாகக் குறிப்பிடும் போது அவன் என்றும், முன்னிலையாகக் குறிப்பிடும் போது நீ என்றும் தான் குறிப்பிடப்பட்டது. அதுவே இன்றும் தொடர்கிறது.

மரியாதைப் பன்மை வழக்கத்திற்கு வந்த பின்பு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமிழ் இலக்கியத்திற்கு அறிமுகமானதால் அவர்களைக் குறிப்பிடும் போது அவர்கள் என மரியாதைப் பன்மையில் குறிப்பிட்டனர்.

கம்பன் சொன்னான் என்று கூறினால் அது மரியாதைக் குறைவு என்று கூற மாட்டோம். கருணாநிதி சொன்னான் என்று கூறினால் அது மரியாதைக் குறைவு என்போம்.

மரியாதைப் பன்மை வழக்கத்திற்கு வந்து விட்ட பின் கருணாநிதி வாழ்கிறார் மரியாதைப் பன்மை வழக்கத்திற்கு வராத காலத்தில் கம்பன் வாழ்ந்தான் என்பதே இதற்குக் காரணம்.

கடவுள் சொன்னான் என்று கூறினால் அது மரியாதைக் குறைவு அல்ல. நபிகள் நாயகத்தை அவ்வாறு கூறினால் அது மரியாதைக் குறைவு என்று கருதுகிறோம்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மரியாதைப் பன்மை வழக்கத்திற்கு வந்த பின்பு தான் தமிழ் இலக்கியத்தில் இடம் பிடித்தார்கள் என்பதே இதற்குக் காரணம்.

அல்லாஹ்வை அவன் என்று குறிப்பிடுகின்ற முஸ்லிம்கள் மற்ற எந்தச் சமுதாயமும் கடவுளுக்கு அளிக்கும் மரியாதையை விட அதிக மரியாதை அளிப்பதைக் காணலாம்.

எவ்வளவு துன்பங்கள் ஏற்படும் போதும் கடவுளைப் பற்றி தரக்குறைவாகப் பேசாத ஒரே சமுதாயம் முஸ்லிம் சமுதாயம் தான். கடவுள் முன்னிலையில் பாடுவதும், ஆடுவதும், கூச்சல் போடுவதும், கடவுளைக் கிண்டலடிப்பதும் முஸ்லிம்களிடம் அறவே இல்லை.

கடவுளை அவன் என்று குறிப்பிடுவது மரியாதைக் குறைவுக்காக அல்ல என்பதை இதிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

இன்னொரு காரணத்துக்காகவும் முஸ்லிம்கள் இறைவனை அவன் என்று ஒருமையில் குறிப்பிடுகின்றனர்.

அல்லாஹ் கூறினார்கள் எனக் கூறும் போது நிறைய அல்லாஹ் இருப்பது போன்ற தோற்றத்தை அது ஏற்படுத்தி விடும். வார்த்தையில் காட்டும் மரியாதையை விட ஏகத்துவம் மிகவும் முக்கியமானதாகும்.

அல்லாஹ்வை அவர்கள் என்று கூறிப் பழகி விட்டால் நிறைய அல்லாஹ்கள் இருந்திருப்பார்களோ என்று எதிர்காலத்தில் நினைத்து விடலாம். அவ்வாறு நினைத்தால் இஸ்லாத்தின் அடிப்படையே வீழ்ந்து விடும்.

மரியாதையை விட இறைவன் ஒரே ஒருவன் என்று கூறுவது தான் முக்கியமானது என்பதால் அல்லாஹ்வை அவன் என்று கூறுவதைத் தமிழ் கூறும் முஸ்லிம்கள் பிடிவாதமாகப் பிடித்துக் கொண்டுள்ளனர்.

அதே சமயத்தில் மார்க்கத்தில் இப்படி எந்தக் கட்டளையும் இல்லை.

அல்லாஹ்வை அவர் என்றோ நீங்கள் என்றோ ஒருவர் கூறினால் மார்க்கத்தில் இது குற்றமாகாது. அவ்வாறு கூறும் உரிமை அவருக்கு உள்ளது.

மரியாதையை மனதில் வைத்து ஓரிறைக் கொள்கைக்கு பங்கம் வராமல் அவன் எனக் கூறுவதே சிறந்தது என்பது நமது கருத்தாகும்.



அரபாத் பஹுர்தீன்

# முத்தரப்பு ஒருநாள் தொடர்: சம்பியனாது இலங்கை ஏ அணி

ஐக்கிய அரபு இராச்சியத்தில் இடம்பெற்று வந்த ஏ அணிகளுக்கு இடையிலான முத்தரப்பு ஒருநாள் தொடரின் இறுதிப் போட்டியில் அயர்லாந்து ஏ அணியை 5 விக்கெட்டுக்களால் வீழ்த்திய இலங்கை ஏ அணி சம்பியன் கிண்ணத்தை தனதாக்கி அசத்தியது.

இலங்கை ,ஆப்கான் மற்றும் அயர்லாந்து ஆகியவற்றின் ஏ கிரிக்கெட் அணிகள் பங்கெடுக்கும் ஒருநாள் தொடர் ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெற்று வந்தது . இதில் ஒரு அணி மற்றைய இரு அணிகளுடனும் தலா 2 முறை லீக் போட்டிகளில் பங்கேற்று பின்னர் புள்ளிகள் அடிப்படையில் முதல் இரு இடங்களைப் பிடிக்கும் அணிகள் இறுதிப் போட்டியில் பலப்பரீட்சை நடாத்தும் வகையில் போட்டி அட்டவணை அமைக்கப் பட்டிருந்தது.

அதற்கமைய தொடரின் லீக் போட்டிகளின் அடிப்படையில் எந்தத் தோல்வியையும் சந்திக்காத இலங்கை ஏ மற்றும் இரு வெற்றிகளைப் பெற்ற அயர்லாந்து ஏ அணியும் (25) இறுதிப் போட்டிக்கு பலப்பரீட்சை நடாத்தின.

இப் போட்டியின் நாணய சுழற்சியில் வென்ற இலங்கை ஏ அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது. அதற்கமைய முதலில் துடுப்பாடிய அயர்லாந்து ஏ அணி 47.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 200 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் மோர்கன் டொப்பிங் பொறுப்புடன் ஆடி அரைச் சதம் கடந்து 73 ஓட்டங்களையும், தோமஸ் மேயஸ் 36 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் தரிந்து ரத்நாயக்க 4 விக்கெட்டுக்களைச் சாய்க்க, மிலான் ரத்நாயக்க 3 விக்கெட்டுக்களையும், துஷான் ஹேமன்த மற்றும் மொஹமட் சிராஸ் ஆகியோர் 2 மற்றும் 1 விக்கெட்டினை கைப்பற்றினர்.

பின்னர் போட்டியின் வெற்றி இலக்கான 201 ஓட்டங்களை அடைய பதிலுக்கு ஆடிய இலங்கை ஏ அணியானது போட்டியின் வெற்றி இலக்கினை வெறும் 34.3 ஓவர்களில் 5 விக்கெட்டுக் களை இழந்து அடைந்தது.

துடுப்பாட்டத்தில் அதன் வெற்றியினை உறுதி செய்த பவான் ரத்நாயக்க மற்றும் மிலான் ரத்நாயக்க ஆகியோர் தலா 77 மற்றும் 87 ஓட்டங்களை வீதம் பெற்று வெற்றியை இலகுவாக்கினர். பந்துவீச்சில் தோமஸ் மேய்ஸ் 3 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக இலங்கை ஏ அணியின் மிலான் ரத்நாயக்க தெரிவானமை குறிப்பிடத்தக்கது.

# இந்திய பாகிஸ்தான் அணிகள் இனி நேருக்கு நேர் மோதக் கூடாது பி.சி.சி.ஐ




சர்வதேச கிரிக்கெட் பேரவை நடாத்துகின்ற கிரிக்கெட் தொடர்களில் பரம எதிரிகளான இந்தியா மற்றும் பாகிஸ்தானை அணிகளை ஒரே குழுவில் சேர்க்க வேண்டாம் என்று இந்திய கிரிக்கெட் சபை சர்வதேச கிரிக்கெட் பேரவைக்கு கடிதம் எழுதியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

இந்தியாவின் ஜம்மு – காஷ்மீரில் உள்ள பஹல்காமில் கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் பாகிஸ்தான் தீவிரவாதிகள் என சந்தேகிக்கப்படும் சிலர் சரமாரியாக நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 26 இந்தியர்கள் பரிதாபமாக உயிரிழந்தது இந்தியா முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

2008 ஆம் ஆண்டு மும்பையில் ஏற்பட்ட வெடிகுண்டு தாக்குதலுக்குப் பிறகு இந்திய அணி, பாகிஸ்தானுக்குச் சென்று விளையாடுவதை முற்றிலுமாகத் தவிர்த்து உள்ளது. இருப்பினும் பாகிஸ்தான் அணி இந்தியா சென்று விளையாடியிருந்து. மேலும், சமீபத்தில் பாகிஸ்தானில் நடைபெற்ற சம்பியன்ஸ் கிண்ண தொடரிலும் இந்திய அணி பாகிஸ்தான் சென்று விளையாட மறுத்ததால், இந்திய அணி பங்கேற்ற அத்தனை போட்டிகளும் ஐக்கிய அரபு இராச்சியத்தின் டுபாயில் நடத்தப்பட்டன.

இந்த நிலையில், பாகிஸ்தான் தீவிரவாதிகளின் துப்பாக்கிச் சூட்டைக் கண்டித்து இனி எந்த இருதரப்பு கிரிக்கெட் தொடர்களிலும் பாகிஸ்தானுடன் மோதப் போவதில்லை என்று இந்திய கிரிக்கெட் சபையின் துணை தலைவர் ராஜீவ் சுக்லா தெரிவித்துள்ளார்.

மேலும், சமீபத்தில் ஐ.சி.சி.க்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில் கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக இருதரப்பு போட்டிகளில் விளையாடாவிட்டாலும், இரு அணிகளும் ஐ.சி.சி. தொடர்களில் ஒரே குழுவில்தான் விளையாடுகின்றன. இந்தப் போட்டிகளுக்கு ரசிகர்களிடம் அதிக ஆதரவும் எதிர்பார்ப்பும் நிலவுகிறது. இனி நடக்கவிருக்கும் ஐ.சி.சி தொடர்களில் இரு அணிகளையும் ஒரே குழுவில் இணைக்க வேண்டாம் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. இதுகுறித்து ஐ.சி.சி தரப்பில் எந்தத் தகவல்களும் வெளியாகவில்லை.

சம்பியன்ஸ் டிரொபிக்கு முன்னதாக, ஐ.சி.சி தலைமையேற்று நடத்திய கூட்டத்தில் இனி நடைபெறும் அனைத்து இந்தியா – பாகிஸ்தான் போட்டிகளும் ஹைபிரிட் மொடலில் வெளிநாடுகளில் மட்டுமே நடத்தப்படும் என்று ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது.

இன்னும் ஓரிரு மாதங்களில் மகளிர் ஒருநாள் உலகக் கிண்ணம் இந்தியாவில் நடைபெறவிருக்கிறது. அதில், இந்தியா மற்றும் பாகிஸ்தான் மகளிர் அணிகள் மோதும் குழுநிலைச் சுற்றுப் போட்டி இடம் பெற உள்ளது. அதை மாற்றி அமைக்குமாறும் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகள் அடுத்த ஆண்டு ஐ.சி.சி ரி 20 உலகக் கிண்ணத்தில் மோதவிருக்கின்றன. இது இடம்பெறுமா இல்லையா என்பது தான் உலக கிரிக்கெட் ரசிகர்களின் பெரும் எதிர்பார்ப்பாக இருக்கும்.

# சாய்ந்தமருது பிளாஸ்டர் விளையாட்டுக்கழகத்தின் ஏழாவது ஆண்டு சீருடை அறிமுக போட்டி



(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது பிளாஸ்டர் விளையாட்டுக் கழகத்தின் ஏழாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கல்முனை ஸ்கை போர்ஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் சாய்ந்த மருது பிளாஸ்டர் விளையாட்டுக் கழகத்திற்கு இடையிலான சீருடை அறிமுக சிநேகபூர்வ கடின பந்து கிரிக்கெட் போட்டி ஒன்று கல்முனை சந்தாங்கேணி ஐக்கிய விளையாட்டு மைதானத்தில் நேற்று நடைபெற்றது.

15 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட போட்டியாக நடைபெற்ற இந்த போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சாய்ந்தமருது பிளாஸ்டர் விளையாட்டுக்கழகம் நான்கு விக்கெட்டுகளை இழந்து 136 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. பிளாஸ்டர் விளையாட்டுக்கழக ஆரம்ப துடுப்பாட்ட வீரர் ஏ.எம். அசாருதீன் 30 பந்துகளை எதிர்கொண்டு 55 ஓட்டங்களை கூடிய ஓட்டமாக பெற்றுக் கொடுத்தார். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கல்முனை ஸ்கை போர்ஸ் விளையாட்டுக் கழகத்தினர் 15 ஓவர்கள் எதிர்கொண்டு 07 விக்கெட்டுகளை இழந்து 105 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டார்.




போட்டியின் ஆட்ட நாயகனாகவும், சிறந்த துடுப்பாட்ட வீரராகவும் 30 பந்துகளை எதிர்கொண்டு 55 ஓட்டங்களை பெற்ற பிளாஸ்டர் விளையாட்டுக்கழக ஆரம்ப துடுப்பாட்ட வீரர் ஏ.எம். அசாருதீன் தெரிவு செய்யப்பட்டதுடன் சிறந்த பந்துவீச்சாளராக முஹம்மட் சஜான் தெரிவு செய்யப்பட்டார். இப்போட்டிக்கு பிரதம அதிதியாக தொழிலதிபர் யூ.எல்.சப்ரின் கலந்து கொண்டார்.

இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media (PVT) Ltd. நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியிலிருந்து வெளிவருகின்றது.